
பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்

108

செந்தமிழறிஞர்கள்

ISBN : 978-81-686742-7-1





வள்ளலார்

இராமலிங்க அடிகளார்

NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

அண்ணா நூற்றாண்டு நூலகம்
ANNA CENTENARY LIBRARY
DIRECTORATE OF PUBLIC LIBRARIES SCHOOL EDUCATION DEPARTMENT

https://www.annacentenarylibrary.org/pages/view/9-%E0%AE%B5%E0%AE%B3%E0%AF%8D%E0%AE%B3%E0%AE%B2%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D-%E0%AE%87%E0%AE%B0%E0%AE%BE%E0%AE%AE%E0%AE%B2%E0%AE%BF%E0%AE%99%E0%AF%8D%E0%AE%95-%E0%AE%85%E0%AE%9F%E0%AE%BF%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D

செந்தமிழ்சிற்பிகள்

வள்ளலார்-இராமலிங்க-அடிகள் *(1823 – 1874)*



அறிமுகம்

இராமலிங்க அடிகளார் அக்டோபர் 5-ந் தேதி 1823-ம் ஆண்டு சிதம்பரத்தை அடுத்துள்ள மருதூரில் இராமையா-சின்னம்மாள் இணையருக்கு 5 வது மகனாகப் பிறந்தார். வடலூர் இராமலிங்கம் என அறியப்படுபவர். ஓதாதுணர்ந்த அறிஞர். சமூக சீர்திருத்தவாதி, ஆன்மிகச் சொற்பொழிவாளர், நூலாசிரியர், பதிப்பாசிரியர், மொழி ஆய்வாளர், சித்த மருத்துவர், பொதுத் தொண்டாற்றியப் புனிதர் என பன்முகங்களைக் கொண்டவர்.

திருவருட் பிரகாச வள்ளலார் என்று மக்களால் அன்புடன் அழைக்கப்படுபவர்.

“தமிழ்க் கவிதைக்குத் தெளிவும் எளிமையும் உருக்கமும் தந்து தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்திய பெருமை இராமலிங்கரையே சாரும்” என்கிறார் மு.வரதராசனார்.

தமிழ் மற்றும் சமுதாயப் பணி

- முருகன்,இராமன்,சிவன் என அனைத்து தெய்வங்கள் மீதும் பாக்கள் எழுதிய போதிலும் கடவுள் ஒருவரே ; எவ்வுயிரும் தம்முயிர் போல எண்ணுதல் வேண்டும் ;கோவில்களில் உயிர்ப் பலி கூடாது என்ற சமய சீர்திருத்தக் கொள்கையுடையவர்.
- சாதி,சமய வேற்றுமைகளையும் வழிபாட்டுச் சடங்குகளையும் மறுத்து, இறையை ஒளிவடிவாக வணங்கும் அருட்பெருஞ்சோதி வழிபாட்டை முன்வைத்தவர்.
- தனது சமரச சுத்த சன்மார்க்க கொள்கைக்காக ,தனிக் கொடி, தனிச் சபை , கண்ட இவர் ‘அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை ‘ என தனி முழக்கம் கொண்டவர்.
- வடலூரில் சத்தியஞான சபையையும் சத்திய தருமசாலையையும் நிறுவி ‘ஜீவகாருண்ய’த்தை வலியுறுத்தியவர்.
- ‘வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்’ என்று இவர் ஏற்றிய ‘அணையா அடுப்பு’ இன்றளவும் வடலூர் தருமசாலையில் மக்களின் பசியாற்றிக் கொண்டிருக்கிறது.
- இராமலிங்க அடிகள் மேற்கொண்ட சமயச் சீர்திருத்தங்கள் அன்றைய மரபார்ந்த சமயவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்படாததால், அவர் எழுதிய திருவருட்பாவுக்கு எதிராகப். யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர், அவரின் பாடல்களை மருட்பா என்று சொல்லி மறுக்க, இருவருக்குமிடையே, அருட்பா மருட்பா விவாதமும் நடந்தது.

படைப்புகள்

- தனது ஒன்பதாவது அகவையில் கந்தகோட்டம் முருகன் மேல் ‘தெய்வமணி மாலை’ இயற்றியவர்.
- மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம் என்ற 2 உரைநடை நூல்களையும் ஏறத்தாழ 6000 பாக்கள், ஆறு திருமுறைகள் கொண்ட திருவருட்பாவை இயற்றியுள்ளார்.
- ஒழிவிலொடுக்கம், தொண்டை மண்டல சதகம், சின்மய தீபிகை ஆகிய நூல்களைப் பதிப்பித்தவர்.

விருதுகள்

- இந்திய ஒன்றிய அரசு 2007ல் இவருக்கு அஞ்சல் தலை வெளியிட்டு கௌரவித்தது.
- ‘ஜோதி வழிபாட்டை முன்னிறுத்தியதால் ‘திருவருட்பிரகாச வள்ளலார்’ என மக்களால் அழைக்கப்படுகிறார்.

(😊)(😊)(😊) @@@@@@ (😊)(😊)(😊)

தனிவாழ்க்கை

இராமலிங்கர் 1850-ல், தன் இருபத்தேழாவது வயதில் தன் அக்கா உண்ணாமுலையின் மகள் தனக்கோடியைத் திருமணம் செய்து கொண்டார். ஆனால் விரைவிலேயே இல்லற வாழ்க்கையை துறந்தார்.

தோற்றம், வாழ்க்கை முறை

தொழுவூர் வேலாயுத முதலியார் தியோசஃபிக்கல் சொசைட்டிக்கு இராமலிங்க வள்ளலார் மறைவுக்குப் பின் அளித்த அறிக்கை ஒன்றில் இராமலிங்க வள்ளலாரின் தோற்றத்தை இவ்வாறு விவரிக்கிறார்

நடுத்தர உயரமுள்ளவராக, பார்ப்பதற்கு எலும்புக்கூடெனவே தோன்றும் மெலிந்த மேனியராக இருப்பார். ஆயினும்

வலிமையுடையவர். மிக விரைந்து நடப்பார். நிமிர்ந்த தோற்றம், தெள்ளிய சிவந்த முகம், நேரான கூரிய மூக்கு, ஒளி வீசும் பெருங்கண்கள். முகத்தில் இடைவிடாத ஒரு துயரக்குறி. இறுதிக் காலத்தில் தலைமயிரை நீள வளரவிட்டிருந்தார். யோகிகளின் வழக்கத்திற்கு மாறாக ஜோடு அணிவார். உடை இரண்டு வெள்ளை ஆடைகளே. எதிலும் மிக்க அளவோடு இருப்பார். ஓய்வு கொள்வதேயில்லை கடும் மரக்கறியுணவினர்.இரண்டு மூன்று நாளைக்கு ஒரு முறையே உண்பார். அதுவும் சில கவளங்களே.அக்காலங்களில் சிறிது சர்க்கரை கலந்த வெந்நீரை மட்டுமே அருந்துவார்'.

ஆன்மீக வாழ்க்கை


தொடக்கம்

வள்ளலார் இளமையில் கந்தகோட்டதில் பல மணிநேரம் தியானத்திலும் வழிபாட்டிலும் ஈடுபடுவார் என பிற்காலத்தில் வரலாற்றாசிரியர்கள் பதிவுசெய்துள்ளனர்.. இராமலிங்கர் முதலில் இயற்றிய பாடல்களான தெய்வமணிமாலை இங்குதான் பாடப்பட்டது. எளிய சொற்கள் கொண்ட 31 பாடல்களைக் கொண்ட இத்தொகுப்பில் பாடல்தோறும் ஈற்றடி

"கந்த கோட்டத்துள் வளர் தலம் ஓங்கு கந்தவேளே தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி சண்முகத் தெய்வமணியே" என்று அமைந்திருக்கும்.

இவற்றுள்

"ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும்" எனத் தொடங்கும் பாடல் மிகவும் புகழ் பெற்றது.



வள்ளலார் தபால்தலை

பன்னிரண்டாவது வயதில் இருந்து முழுமையான ஞான வாழ்வு தொடங்கியதாகப் பாடியிருக்கிறார் ("*பன்னிரண்டாண்டு தொடங்கி நான் இற்றைப் பகல் வரை அடைந்தவை எல்லாம்*" - பிள்ளைப் பெருவிண்ணப்பம்). இளமையில் தினமும் திருவொற்றியூர் சென்று வழிபடத் தொடங்கினார். அருட்பாவின் முதல் மூன்று திருமுறையின் பல பாடல்கள் ஒற்றியூர் இறைவன் மீது பாடப்பட்டவை.

சமரச சுத்த சன்மார்க்கம்

இராமலிங்கர் 1858-ல் சென்னையை விட்டு சிதம்பரம் சென்றார். இராமலிங்கரைக் கருங்குழி கிராமத்து மணியக்காரரான திருவேங்கடம் என்பவர் சந்தித்துத் தன் இல்லத்தில் வந்து தங்கியிருக்குமாறு வேண்டிக்கொண்டார். இராமலிங்கம் மணியக்காரரின் இல்லத்தில் ஒன்பது வருடங்கள் தங்கியிருந்தார். அங்கே 1865-ம் ஆண்டு 'சமரச வேத சன்மார்க்க சங்கம்" என்ற அமைப்பை உருவாக்கினார். பிற்காலத்தில் அந்தப் பெயரை "சமரச சுத்த சன்மார்க்க சத்தியச் சங்கம்" என்று மாற்றியமைத்தார். வேதாந்தம், சித்தாந்தம், போதாந்தம், நாதாந்தம், யோகாந்தம், கலாந்தம் என்னும் ஆறு அந்தங்களுக்கும் பொதுவான நெறி என்ற பொருளில் இப்பெயரை இட்டார்.

கடவுள் ஒருவரே, அக்கடவுளை ஒளி வடிவில் வழிபட வேண்டும், சிறுதெய்வ வழிபாடு கூடாது, அத்தெய்வங்களின்

பெயரால் உயிர்ப்பலி கூடாது, புலால் உண்ணக் கூடாது, சாதி சமய வேறுபாடுகள் கூடாது, எவ்வுயிரையும் தன்னுயிர் போல எண்ணவேண்டும், ஆன்மநேய ஒருமைப்பாட்டுணர்வைக் கைக்கொள்ள வேண்டும், பசி தீர்த்தல் முதலிய ஜீவகாருண்யமே பேரின்ப வீடு பேறடைய வழி போன்ற மெய்நெறிகளும்; புராணங்களும் சாத்திரங்களும் முடிவான உண்மையைத் தெரிவிப்பதில்லை போன்ற சீர்திருத்தக் கொள்கைகளும்; இறந்தவரை எரிக்காது புதைக்க வேண்டும் என்பது போன்ற வாழ்க்கைநெறிகளும், வழிபாட்டுச் சடங்குகளும் சாதிச்சடங்குகளும் தேவையில்லை என்பது போன்ற விலக்குகளும் சமரச சுத்த சன்மார்க்க நெறியின் கொள்கைகள்..



தமிழியல் நோக்கில் வள்ளலார்

"சாதி சமயச் சழக்கை விட்டேன் - அருட்சோதியைக் கண்டேனடி"

"கலையுரைத்த கற்பனையே நிலைஎனக் கொண்டாடும் கண்மூடி வழக்கம்எலாம் மண்மூடிப் போகமலைவறு சன்மார்க்கம் ஒன்றே நிலைபெற"

போன்ற பல பாடல்களில் இந்நெறியின் கொள்கைகளை விளக்கிப் பாடியிருக்கிறார்.

தொழுவூர் வேலாயுத முதலியார் தியோசஃபிக்கல் சொசைட்டிக்கு அளித்த அறிக்கையில் வள்ளலாரின் கொள்கைகளை இவ்வாறு கூறுகிறார்

- *சாதி சமய வேற்றுமைகள் இறுதியில் ஒழிந்துபோம். அகில உலக சகோதரத்தும் வரும். இந்தியாவில் அது நிலை நாட்டப்படும்.*
- *மக்களால் கடவுள் என்று சொல்லப்படுவது உண்மையில் எல்லா உயிர்களிடத்தும் காட்டும் அன்பே. இவ்வன்பே இயற்கை முழுவதையும் ஒழுங்காக இயங்கச் செய்கிறது.*
- *மக்கள் தமக்குள்ளே மறைந்து கிடக்கும் தெய்விக சக்தியை உணர்ந்து கைவரப்பெற்றால், பூமியின் ஈர்ப்பாற்றல் முதலிய இயற்கை நியதிகளையும் மாற்றும் அரிய சக்திகளையும் பெறக்கூடும்.*

இலக்கிய வாழ்க்கை

இராமலிங்க வள்ளலார் பாடிய ஆறாயிரம் பாடல்களின் திரட்டு, திருவருட்பா என்று அழைக்கப்படுகிறது. இது ஆறு திருமுறைகளாக பகுக்கப்பட்டு உள்ளது. திருவருட்பா, முதலில் இராமலிங்க அடிகளின் தலைமைச் சீடர் தொழுவூர் வேலாயுத முதலியாரால் நான்கு திருமுறைகளாக வெளியிடப்பட்டன. பின்னர் ஐந்தாம், ஆறாம் திருமுறைகள் வெளியிடப்பட்டன. முன்னாள் தமிழக அறநிலையத்துறை ஆணையாளர் பாலகிருஷ்ணன், இராமலிங்கரின் உரைநடை, கடிதங்கள் முதலியவற்றைத் தனி நூலாகத் தொகுத்து வெளியிட்டார்.

பின்னர் ஊரன் அடிகளும் வள்ளலார் படைப்புகளின் காலமுறைப் பதிப்பு வெளியிட்டுள்ளார்.


உ
திருச்சிற்றம்பலம்.
திருவருட்பிரகாசவள்ளலாரென்னும்
சிதம்பரம்
இராமலிங்கபிள்ளை
அவர்கள்
திருவாய்மலர்ந்தருளிய
திருவருட்பா.
முதற்புத்தகம்.
இஃது
சமரசவேதசன்மார்க்க சங்கத்தை பரிபாலித்த
புதுவை - வேலுமுதலியார்
சிவானந்தபுரம்-செல்வராயமுதலியார்
இறுக்கம்-இரத்தினமுதலியார்
வேண்டுகோளின்படி
இவ்வாசிரியர்மாணுக்கரும்
சமரசவேதசன்மார்க்கசங்க
வித்வான்களிலொருவருமாகிய
தொழுவூர்-வேலாயுதமுதலியாரால்
அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.
ASIATIC PRESS, 392, LINGEE CHETTY STREET, MADRAS.
February 1867.
Registered Copy-right.

திருவருட்பா

"கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த
குளிர் தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே"
(அருள்விளக்கமாலை, 2)
"கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே !
காணுர்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே!"
(அருள்விளக்கமாலை, 39)
"அருட்ஜோதி தெய்வம் என்னை ஆண்டு கொண்ட தெய்வம்
அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்த தெய்வம்" (பரசிவ நிலை 1)

போன்ற எளிய வார்த்தைகளில் இறைவனைப் புகழ்ந்து இராமலிங்கர் பாடிய அருட்பா பாடல்கள் புகழ்பெற்றவை. ஏறக்குறைய எல்லாப் பாடல்களுமே சமரசம் ஜீவகாருண்யம் ஆகிய இரண்டு அடிப்படை கொள்கைகளை பாடுபவை.

சிற்றிலக்கிய மரபைச் சேர்ந்த உலா, தூது வகைமையில் பல பாடல்கள் அருட்பாவில் இடம் பெற்றுள்ளன. சிவபெருமான் உலா வரும்போது கண்டு காதல் கொண்ட காதலியாகக் கற்பனை செய்து பாடிய பாடல்கள் திருவுலாப் பேறு, திருவுலா வியப்பு, திருவுலாத் திறம் போன்றவை. நாரையையும் கிளியையும்

இறைவனிடம் தூது அனுப்பும் தூது வகைப் பாடல்களும் எழுதியுள்ளார்.

உரைநடை

வள்ளலார் மனுமுறைகண்ட வாசகம் (1854) என்னும் மனுநீதி சோழன் நீதிமுறை செய்த வரலாற்றை விளக்கும் உரைநடை நூலை எழுதினார்.

"நல்லோர் மனதை நடுங்கச் செய்தேனோ! வலிய வழக்கிட்டு மானம் கெடுத்தேனோ!" எனத் தொடங்கும் புகழ்பெற்ற பாடல் மகனது செயல் கேட்டு மனுநீதிச் சோழன் தன் செங்கோல் வளைந்தது என வருந்தும் பகுதியில் வருவது.



வடலூர் சத்தியஞான சபை

செய்யுள் நுட்பங்கள்

செய்யுளில் சொல்லைப் பலவிதமாகக் கையாண்டு புலமையைக் காட்டும் வழக்கம் சிற்றிலக்கியக் காலம் முதல் அதிகமாக இருந்து வந்தது. குறிப்பிட்ட சில சொற்களை எடுத்துக் கொண்டு, அவற்றின் முதலிலும், இடையிலும், கடையிலும் உள்ள எழுத்துக்களைத் தனித்தனியே பிரித்து வெவ்வேறு சொற்களாக்கிக் குறிப்பினால் பொருளுணர்த்தும் முறையில் வள்ளலார் பாடிய பாடல்கள் உள்ளன. அவை எழுத்தியலமைப்பில் 'மிறைக் கவி' (சித்திரகவி) என்னும் வகையை சேர்ந்தவை.

தாதாதா தாதாதா தாக்குறைக்கென் செய்குதும்யாம்
தாதாதா என்றுலகில் தான் அலைந்தோம்-போதாதா
நந்தா மணியே நமச்சிவாயப் பொருளே
எந்தாய் எனப் புகழவே.




வள்ளலார் ஆலயம்

என்னும் வெண்பாவின் முதலடியில் ஏழு முறை வந்துள்ள 'தா' என்னும் எழுத்துக்களின் பின் 'குறை' என்ற சொல்லை இணைத்து எழுதாக்குறை என்று பொருள் கொள்ள வேண்டும். இரண்டாவது அடியில் உள்ள தாதாதா என்பதை தாதா, தா எனப் பிரித்து வள்ளலே தா(கொடு) எனப் பொருள் கொள்ள வேண்டும்.

சாற்றுகவிகள்அக்காலத்தில் வெளிவந்த பல நூல்களுக்கு சாற்றுகவி எழுதியுள்ளார். அவற்றுள் மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் நீதிநூலுக்கு (1859) எழுதிய சாற்றுகவி குறிப்பிடத்தக்கது.

சமூகப் பணி

சத்திய தரும சாலை



வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு


1858 முதல் 1867 வரை கருங்குழி என்னும் ஊரில் வேங்கட ரெட்டியார் என்பவர் வீட்டில் தங்கியிருந்தபோது அருகிலுள்ள வடலூரில், பார்வதிபுரம் என்னும் கிராமத்து மக்களிடம் எண்பது காணி நிலத்தைத் தானமாகப் பெற்று, மே 23, 1867-ல் {வைகாசி மாதம் பதினொன்றாம் தேதி} அங்கு சமரச வேத தருமச்சாலையைத் தொடங்கினார். பின்பு, அதை அவரே 'சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச்சாலை' எனப் பெயர் மாற்றம் செய்தார். இந்தத் தருமச்சாலையில் மக்கள் வழங்கும் பொருள் உதவியைக் கொண்டு சாதி, மத, மொழி, இன, நிறம், நாடு, உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பாகுபாடுகள் பாராமல் மூன்று வேளையும் பசித்தவர்க்கு உணவளிக்கும் தொண்டை தொடங்கினார். உணவிட்டமையால் இராமலிங்க அடிகள் 'வள்ளலார்' என அழைக்கப் படலானார். வடலூரில் தலைமைநிலையம் இருந்தாலும், உலகமெங்கும் அவரது கொள்கையைப் பின்பற்றுகிறவர்கள் வடலூர் போல அன்னசாலைகள் நடத்துகிறார்கள்.

வள்ளலார் 1867-ல் சன்மார்க்க போதினி பாடசாலை என்ற பாடசாலை ஒன்றைத் தொடங்கினார். தமிழ், சம்ஸ்கிருதம், ஆங்கிலம் என மும்மொழிகள் அங்கே கற்பிக்கப்பட்டன. குழந்தைகள் முதல் முதியவர் வரை அனைவரும் அங்கு கற்கலாம் என்று அப்பாடசாலை பற்றிய குறிப்பில் இருந்து அறிய முடிகிறது.

சத்திய ஞான சபை

எல்லா மதங்களிலும் உள்ள உண்மை ஒன்றே என்பதை குறிக்கும் வண்ணம் இராமலிங்க அடிகள் தான் தோற்றுவித்த மார்க்கத்திற்கு 'சர்வ சமய சமரச சுத்த சன்மார்க்கம்' என்று பெயரிட்டார். அதை நிலைநிறுத்தும்பொருட்டு அவர் நிறுவிய சத்திய தருமச்சாலைக்கு அருகில் ஓர் ஒளித் திருக்கோயிலை 1871-ம் வருடம் அமைக்கத் தொடங்கினார். சுமார் ஆறு மாதங்களில் கட்டி முடிக்கப்பட்ட அந்தத் திருக்கோயிலுக்குச் 'சமரச சுத்த சன்மார்க்க சத்தியஞான சபை' என்று பெயர்

சூட்டினார். 25.1.1872 (தை மாதம் 13-ம் நாள்) தைப்பூசத் தினத்தன்று முதல் ஒளி வழிபாட்டு விழா நடைபெற்றது.



வள்ளலார் வாழ்வும் வாக்கும்


இராமலிங்க அடிகள் சாதியப் பாகுபாடுகளை மறுத்தார். இந்து மதத்தில் இருந்த வந்த ஆசாரங்களை ஒப்புக்கொள்ளாமல், எந்த வழிபாட்டு சடங்குகளையும் கடைப்பிடிக்காமல் இறைவனை ஒளி வடிவமாக வணங்கும் 'அருட்பெரும்சோதி' வழிபாட்டை முன்வைத்தார். அதனால் பல உயர்சாதி இந்துக்களின் எதிர்ப்பை ஈட்டினார். அவருடன் அணுக்கமாக இருந்த தொழுவூர் வேலாயுத முதலியார் போன்ற தொண்டர்கள் அவரை விட்டு விலகிச் சென்றனர். அதைக்குறித்து 'கடைவிரித்தேன் கொள்வாரில்லை' என்று இராமலிங்க அடிகள் எழுதினார்.

1870-க்குப் பிறகு இராமலிங்க அடிகள் வடலூருக்குத் தெற்கே இரண்டு மைல்தொலைவில் இருந்த மேட்டுக்குப்பத்தில் சித்திவளாக மாளிகை என்னும் இடத்தில் வாழ்ந்துவந்தார். அங்கு பிரம்மதண்டிகா யோகம் முதலான பலவிதமான யோக சாதனைகளை மேற்கொண்டார். 20.10.1873, செவ்வாய்க்கிழமை காலை எட்டு மணிக்கு சித்திவளாகத் திருமாளிகை முன் கொடியேற்றி வைத்து, கூடியிருந்தவர்களுக்கு நீண்ட அருளுரை வழங்கினார் வள்ளலார். அந்த அருளுரையே

'பேருபதேசம்' என்று சொல்லப்படுகிறது. (பார்க்க பேருபதேசம்).

விவாதங்கள்

இராமலிங்க அடிகள் எழுதிய திருவருட்பாவுக்கு எதிராக பல கண்டன நூல்கள் வெளிவந்தன. வள்ளலார் மேற்கொண்ட சமய சீர்திருத்தத்தால் அவரை அன்றைய மரபார்ந்த சைவ வாதிகள் ஏற்கவில்லை. இராமலிங்க அடிகள் முன்வைத்த மாற்றுப் பண்பாட்டையும் மறுத்தனர். அந்த மறுப்புக்கு இராமலிங்க அடிகளின் மாணவர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். 1868-ல் சண்முகம் பிள்ளை என்பவரால் எழுதப்பட்ட 'திருவருட்பா தூஷண பரிகாரம்' என்னும் நூலின் வழியாக அருட்பா பற்றிய விவாதம் தொடங்கியது. 1869-ல் போலியருட்பா மறுப்பு என்ற நூல் எழுதப்பட்டது; இராமலிங்க வள்ளலார் எழுதியவை அருட்பா அல்ல, போலி அருட்பா என்று பல காரணங்களைக் கூறி இந்நூல் மறுத்தது. இதற்கு எதிராக 12 கண்டன நூல்கள் வெளிவந்தன.



வள்ளலார் காட்டும் வழி

வடலூர் இராமலிங்க வள்ளலாரின் பாடல்களை அருட்பா என்று சொல்லலாமா என்ற விவாதம் பின்னர் யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்களால் வலுவாக எழுப்பப்பட்டது. ஆறுமுக நாவலர் மிகக் கடுமையான சொற்களை பயன்படுத்தினார். அதற்கு வள்ளலாரின் சீடர்கள் தொழுவூர் வேலாயுத முதலியார் முதலியோர் வசை பாதி விவாதம் பாதியாக பதிலுரைத்தார்கள். தொடர்ந்து மான நட்ட வழக்கும் நடந்தது.

பின்பு 1904-ல் யாழ்ப்பாணம் கதிரைவேற் பிள்ளை அவ்விவாதத்தை முன்னெடுத்து வசைக் கவிதைகளை எழுதினார். இராமலிங்கம் பிள்ளை பாடல் ஆபாச தர்ப்பணம் அல்லது மருட்பா மறுப்பு என்ற நூலை எழுதி வெளியிட்டார். அதற்கு வடலூரைச் சேர்ந்த பானு கவி 1905-ல் இராமலிங்கம் பிள்ளை பாடல் ஆபாச தர்ப்பண கண்டன நியாய வச்சிர குடாரம் என்ற நூலை எழுதி வெளியிட்டார். கதிரை வேற் பிள்ளைக்கு உத்தரக் கிரியை நடத்தும் துண்டுப் பிரசுரங்கள் பல அடிக்கப் பட்டன.

தமிழினி வெளியீடாக வந்த 'அருட்பா மருட்பா விவாதம்' என்ற நூலில் ஆய்வாள ப. சரவணன் ஆறுமுகநாவலருக்கும் வடலூர் இராமலிங்க வள்ளலாருக்கும் இடையே நடந்த அருட்பா மருட்பா விவகாரத்தை விரிவான ஆதாரங்களுடன் விளக்கியிருக்கிறார். (பார்க்க அருட்பா மருட்பா விவாதம்)

மதிப்பீடு

இராமலிங்க வள்ளலார் மூன்று வகைகளில் தமிழ் சமயத்திற்கும், பண்பாட்டிற்கும், சமூகத்திற்கும் பெரும்பங்காற்றியவர்.

மதச் சீர்திருத்தம்

இராமலிங்க வள்ளலார் பிறந்த காலகட்டத்தில் சைவ சமயம் புத்தெழுச்சி கொள்ள தொடங்கியது. தொன்மையான சைவ சமயநூல்கள் ஏட்டில் இருந்து அச்சில் பதிப்பிக்கப்பட்டன. அவற்றை பயிலவும் விவாதிக்கவும் சைவ மன்றங்கள் தமிழ்நாடு

முழுக்க உருவாயின. சைவப்பிரச்சாரம் செய்யும் பேச்சாளர்களும் பெருகினர். சைவத்துக்கு எதிரான வேதாந்தம் மற்றும் கிறிஸ்தவ மதங்களை கண்டிக்கும் நூல்களும் உருவாயின. இந்த சைவ மறுமலர்ச்சியின் உள்ளடக்கமாக சாதியப்பார்வையும் பழமைவாதமும் இருந்தது. சைவ சமயத்தில் அமைப்புசார்ந்த ஆதிக்கம் கொண்டிருந்த ஸ்மார்த்த பிராமணர்கள், சைவ வேளாளர்கள் போன்ற சாதியினரே சைவ மறுமலர்ச்சி இயக்கத்திலும் ஆதிக்கம் செலுத்தினர். அவர்களில் பலர் பழைய சாதிய ஆசாரங்களையும் நம்பிக்கைகளையும் முன்னிறுத்தினர். ஆறுமுக நாவலர் போன்றவர்கள் தீண்டாமை உட்பட பழைய ஆசாரங்களை வலியுறுத்தினர். ஆகமமுறைசார்ந்த வழிபாட்டை சைவசமயத்தின் ஒரே வழிபாட்டுமுறையாக அனைத்து இடங்களிலும் நிறுவ முயன்றனர்.

அந்த சாதிஆதிக்கம், பழமைவாதம், ஒற்றைப்படையாக்கம் ஆகியவற்றுக்கு எதிரான எழுச்சியாக உருவானதே இராமலிங்க வள்ளலாரின் குரல். அவர் ஆலயவழிபாடு, சடங்குகள் ஆகியவற்றுக்கு எதிராக தனிமனிதனின் பக்தியையும், யோகசாதனைளையும் முன்வைத்தார். சாதிப் பாகுபாடுகளை மறுத்தார். சமயச்சழக்குகள் பயனற்றவை என்றார். மத ஆதிக்கத்திற்கு எதிராக இருபதாம்நூற்றாண்டின் மானுடசமத்துவக் கருத்துக்களையும் தனிமனித ஆன்மிக மீட்பையும் முன்வைத்தார். வள்ளலார் வலியுறுத்தியது நவீன ஜனநாயக யுகத்திற்குரிய நவீன ஆன்மிகம். ஆகவேதான் அவரை அப்போதும் பின்னரும் இருந்த முற்போக்காளர்களும் சீர்திருத்தவாதிகளும் ஏற்றுக்கொண்டனர்.

அவர் காலகட்டத்தில் அவருக்கு ஏற்பட்ட பெரும் எதிர்ப்பும் இப்பின்னணியில் உருவானதுதான். தொடக்கத்தில் அவர் ஸ்மார்த்தர், சைவவேளாளர் போன்றோரின் ஆதிக்கத்தை எதிர்த்தபோது அவருடன் இருந்த தொழுவூர் வேலாயுத முதலியார் போன்ற மாணவர்கள் அவர் சுத்தசன்மார்க்கம் என்னும் ஜோதிவழிபாட்டு முறையை முன்வைத்தபோது விலகிச்சென்றனர். ஆனால் இராமலிங்க வள்ளலார் தமிழ்ப்பண்பாட்டிலேயே உருவான ஒரு நவீன ஆன்மிகப்பார்வையை தொடங்கிவைத்தார். கேரளத்தில்

நாராயண குரு, வங்காளத்தில் ராஜா ராம்மோகன் ராய் , ராமகிருஷ்ண பரமஹம்சர் என இந்தியா முழுக்க அவ்வாறு மரபான மத ஆசாரங்களை மறுத்து உருவான நவீன ஆன்மிக இயக்கங்களில் வள்ளலாருடைய இயக்கம் முன்னோடியானது.

உணவிடுதல்

இராமலிங்க வள்ளலார் தன் உணவளிக்கும் சேவையை தொடங்கிய காலகட்டத்தில் இந்தியா எங்கும் பெரும் பஞ்சம் நிலவியது. வங்காளம் முதல் தமிழ்நாடு வரை லட்சக்கணக்கானவர்கள் பட்டினியால் மடிந்தனர். அந்தப் பஞ்சங்களில் இந்தியாவில் இருந்த மரபான மதநிறுவனங்கள் பஞ்சத்துக்கு எதிரான நிவாரணப்பணிகளில் பெருமளவில் ஈடுபடவில்லை. அன்றிருந்த மத ஆசாரங்களும், தீண்டாமை முதலிய சாதிய விலக்குகளும், ஊழ்வினை போன்ற கொள்கைகளும் அதற்குத் தடையாக இருந்தன. இராமலிங்க வள்ளலார் தன் உணவுக்கொடை வழியாக அனைத்து அறங்களிலும் முதன்மையானது எளியோருக்கு உணவிடுவதே என வலியுறுத்தினார். இன்னொரு மனிதன் பட்டினி கிடப்பதை கண்டு வெறுமே இருப்பது பெரும் பாவம் என கூறினார். எத்தனை வழிபாடுகள் செய்தாலும் அந்தப்பழி கொண்டவர்களுக்கு மீட்பில்லை என்றார். அன்று வழிபாடுகள், சடங்குகளையே ஆன்மிகம் என எண்ணியிருந்த மரபுவாதிகளுக்கு அதன் வழியாக காலத்துக்கு உகந்த அழுத்தமான செய்தியைச் சொன்னார்.

பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வடலூர் சபையில் உணவளிக்கப்பட்டது. அதை முன்னுதாரணமாகக் கொண்டு தமிழ்நாடு முழுக்க ஏராளமான உணவுக்கொடைகள் தொடங்கப்பட்டன. வள்ளலார் அளித்த உணவுக்கொடை என்பது மனிதாபிமானத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய மதநம்பிக்கையின் அறிவிப்பு. பின்னர் சுவாமி விவேகானந்தர் தொடங்கிய ராமகிருஷ்ண மடமும் பஞ்சநிவாரணப் பணிகளில் ஈடுபட்டது. பசித்தவனுக்கு உணவிடுதலே எந்த வழிபாட்டையும் விட முதன்மையான இறைவழிபாடு என்று

விவேகானந்தர் சொன்னார். இராமலிங்க வள்ளலார் அவ்வகையில் இந்தியாவுக்கே ஒரு முன்னோடி.

சித்தர்யோக மரபின் மறுமலர்ச்சி

இராமலிங்க வள்ளலாருக்கு முன்புவரை சைவத்திற்குள் இரண்டு போக்குகள் ஒன்றையொன்று மறுத்து செயல்பட்டன. சைவசித்தாந்தம் மற்றும் சைவ வழிபாட்டு முறையே மையப்போக்கு. சைவத்துக்குள் இருந்த துணைமதங்களான காளாமுகம், காபாலிகம், மாவிரதம் பாசுபதம் போன்றவை காலப்போக்கில் மருவி ஒன்றாகி உருவான தமிழ்ச்சித்தர்மரபு ஒருவகை நாட்டார் மதமாக நீடித்தது. ஊர்கள்தோறும் சித்தர்கள் இருந்தனர். சித்தர் பாடல்கள் வாய்மொழி மரபாக பயிலப்பட்டன. ஆனால் மையச் சைவ வழிபாட்டுமுறை அவர்களை கடுமையாக நிராகரித்தது. அவர்கள் ஆங்காங்கே வட்டாரம் சார்ந்தே அறியப்பட்டனர்.

அச்சுமுறை தோன்றியதும் சித்தர்பாடல்கள் மலிவுவிலை 'குஜிலிப் பதிப்பு'களாக சந்தைகள் தோறும் விற்கப்பட்டன. சித்தர்பாடல்களிலுள்ள எளிமையான மொழியும் நாட்டார்ப்பாடல்களின் அமைப்பும் மக்களிடையே அவை பெரும் செல்வாக்கு செலுத்த காரணமாயின. இவ்வாறு மீண்டெழுந்து வந்த சித்தர்மரபை முழுமையாகப் புரிந்துகொள்வதில் தமிழ்ச்சூழலுக்கு பெரிய தடைகள் இருந்தன. அவை சித்தர்களின் குறியீட்டுமொழியில் அமைந்தவை. மறைமுக யோகப்பயிற்சிகளை முன்வைப்பவை. பெரும்பாலும் பதிப்பாளர்கள் அமர்த்திய தமிழறிஞர்களின் உரைகளே அவற்றுக்கு வந்தன. சித்தர்மரபு சித்தமருத்துவம் இரண்டும் வெவ்வேறு வகைகளில் விளக்கப்பட்டன.


சைவசித்தாந்தத்தின் சாரமாக உள்ள அன்பேசிவம் என்னும் மையக்கருத்தையும் சித்தர்களின் யோகமுறைகள் சார்ந்த ஒருமைநோக்கையும் நடைமுறையில் இணைத்தவர் வள்ளலார். சித்தமருத்துவம் சார்ந்தும் அவர் ஏராளமாக எழுதியிருக்கிறார். சித்தர்மரபைச் சேர்ந்த யோகமுறைகளையும் மறைஞானமுறைகளையும் விளக்கியிருக்கிறார்.

வள்ளலாரின் மெய்யியல் என்பது ஒருபக்கம் நவீன யுகத்திற்குரிய மனிதாபிமானநோக்கும் சமத்துவப் பார்வையும் பகுத்தறிவு சார்ந்த அணுகுமுறையும் கொண்டது. மறுபக்கம், ஆழத்தில் அது சித்தர்கள் முன்வைக்கும் அகவயமான தியானமுறைகளும் யோகப்பயிற்சிகளும் ஒருமைநோக்கும் அடங்கியது. இவ்விணைப்பே ஆன்மிகத்தில் அவருடைய முதன்மைக் கொடை.

அருட்பா மருட்பா விவாதம்

https://tamil.wiki/wiki/%E0%AE%85%E0%AE%B0%E0%AF%81%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%BE_%E0%AE%AE%E0%AE%B0%E0%AF%81%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%BE_%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%B5%E0%AE%BE%E0%AE%A4%E0%AE%AE%E0%AF%8D

அருட்பா மருட்பா விவாதம் (1867-1904) இராமலிங்க வள்ளலாரின் பாடல்கள் அருட்பா என்னும் பெயரில் தொகுக்கப்பட்டதை எதிர்த்து யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் உருவாக்கிய விவாதம். ஆறுமுக நாவலர் சைவத்திருமுறைகளே அருட்பாக்கள், இராமலிங்க வள்ளலார் எழுதியவை மருட்பாக்கள் என வாதிட்டார். இருபக்கமும் வெவ்வேறு அறிஞர்கள் இணைந்துகொள்ள மாறிமாறி கண்டன நூல்கள் வெளியிடப்பட்டன. அவதூறு வழக்குகளும் நடைபெற்றன.



நவீன நோக்கில் வள்ளலார்

விவாதத்தின் அடிப்படை

இராமலிங்க வள்ளலார் இயற்றிய பாடல்களை தொகுத்து நூலாக வெளியிடும்போது அந்நூலுக்கு திரு அருட்பா என பெயரிட்டவர் அவருடைய முதன்மை மாணவர் உபயகலாநிதி தொழுவூர் வேலாயுத முதலியார். இதற்கு இராமலிங்க வள்ளலார் எந்த மறுப்பையும் தெரிவிக்கவில்லை. இதை தொழுவூர் வேலாயுத முதலியார் திருவருட்பா வரலாறு என்னும் தலைப்பில் பாடிய செய்யுளில் குறிப்பிட்டிருக்கிறார். திரு என்னும் சொல் மங்கலம், செல்வம், மதிப்பு என்னும் பொருள் கொண்டது. தொழுவூர் வேலாயுத முதலியார் இராமலிங்க வள்ளலார் பாடல்களை ஆறு திருமுறைகளாகப் பிரித்தார். முறை என்னும் சொல் வைப்பு, ஒழுங்கு, அமைப்பு, கூட்டு என்னும் பொருள் கொண்டது. திருவருட்பா என நூலுக்கு பெயரிட்டமையால் பகுப்புகள் திருமுறைகள் எனப்பட்டன.

திருவருட்பா வெளியீட்டுப் பணி 1860-ல் தொடங்கி 1867-ல் முடிவுற்றது. முதலில் முதல் நான்கு திருமுறைகளும் இராமலிங்க வள்ளலாரின் மேற்பார்வையில், அவருடைய ஏற்புடன் வெளியாகின என்பதை அவர் எழுதிய கடிதங்கள் காட்டுகின்றன. நூலில் ஆசிரியர் பெயர் திருவருட்பிரகாச வள்ளலார் என இருந்ததைக் கண்டு இராமலிங்க வள்ளலார் சீற்றம் அடைந்ததாகவும் அவர் சிதம்பரம் இராமலிங்கம் பிள்ளை என்று போடவே சொல்லியிருந்ததாகவும் தொழுவூர் வேலாயுத முதலியார் குறிப்பிடுகிறார். பின்னர் அப்பெயரை திருவருட்பிரகாச வள்ளல் + ஆர் என பிரித்து அந்த ஆர் மட்டுமே தான் என்றும், வள்ளல் அதில் பேசப்பட்டிருக்கும் இறைவனே என்றும் இராமலிங்க வள்ளலார் விளக்கிக் கொண்டு அமைதியடைந்தார்.

மறுப்பு



அருட்பா மருட்பா கண்டனத்திரட்டு

யாழ்ப்பாணம் நல்லூர் [ஆறுமுக நாவலர்](#) 1864-ல் சிதம்பரத்தில் சைவப்பிரகாச வித்தியாசாலை என்னும் பாடசாலையை நிறுவி அங்கிருந்து நூல்களை பதிப்பித்துக் கொண்டும், சைவப்பேருரைகள் ஆற்றிக்கொண்டும் இருந்தார். அப்போது வெவ்வேறு ஆலயங்களில் மரபான சைவத்திருமுறைகளுடன் இராமலிங்க வள்ளலாரின் அருட்பாவையும் மக்கள் ஓதிவந்தனர். அது எளிமையாக இருந்ததும், பரவலாக அச்சிடப்பட்டு வெளியானதும், சைவத்திருமுறைகள் ஓதுவார்கள் அன்றி மற்றவர்களுக்கு கிடைக்காமலிருந்ததும் காரணங்கள். சைவத்திருமுறைகளை ஓதுவார்கள் மற்றும் உயர்சாதிச் சைவர்கள் மட்டுமே பாடவேண்டும் என்ற எழுதப்படாத தடையும் அன்றிருந்தது.

சைவத்திருமுறைகளுக்கு நிகராக ராமலிங்க வள்ளலாரின் பாடல்கள் ஆலயங்களில் ஓதப்படுவதைக் கண்ட ஆறுமுக நாவலர் சீற்றம் அடைந்தார். அவை அருட்பா என்னும் பெயரிலும் திருமுறைகள் என்னும் பெயரிலும் வந்தமைதான் அதற்குக் காரணம் என அவர் எண்ணினார். அத்துடன் வள்ளலாரின் தொண்டைமண்டல முதலியார் சாதியினர் அதை தங்கள் சாதிக்குரிய பாடல்களாக எடுத்துக்கொண்டதாகவும் எண்ணினார், அதில் ஓரளவு உண்மையும் இருந்தது.

ஆறுமுக நாவலர் சைவத்தின் ஆகமவழிபாட்டு முறையை மாற்றமில்லாமல் அனைத்து ஆலயங்களுக்கும் வலியுறுத்தியவர். வேறுவகையான வழிபாடுகள் அனைத்தையும் பிழைகள் என்று நினைத்தவர். ஆசாரங்களை அழுத்தமாக நிறுவமுயன்றவர். ஆகவே அவருக்கு இராமலிங்க வள்ளலாரின் பாடல்கள் ஆலயங்களில் பாடப்படுவது பெரிய மீறல் என்றும் சைவத்தைப் பழிக்கும் செயல் என்றும் தோன்றியது. அவர் மதச்சொற்பொழிவு ஆற்றச்சென்ற இடங்களில் எல்லாம் கடுமையாக கண்டித்துப்பேசிவந்தார். இராமலிங்க வள்ளலாரின் பாடல்கள் அருட்பா அல்ல மருட்பா என அவர் சொன்னார்

பூசல்



வள்ளலாரும் நாவலரும்

அருட்பா மருட்பா பூசல் உருவாவதற்கு மூன்று பின்னணிகள் இருந்தன.

ஆறுமுக நாவலர் சிதம்பரம் ஆலயத்தில் பூசை செய்யும் உரிமைகொண்ட தீட்சிதர்களை கடுமையாகக் கண்டித்துவந்தார். அவர்கள் ஆகம முறையை கைக்கொள்ளவில்லை என்றார். தீட்சிதர்கள் தங்கள் மரபுக்கு தொன்றுதொட்டே இருந்து வரும் வழிபாட்டுமுறையை கடைப்பிடிப்பதாகவும் அதற்கு மரபுசார்ந்த ஏற்பு உண்டு என்றும் சொன்னார்கள். சைவ ஆதீனங்கள் தீட்சிதர்களை எதிர்த்தனர். ஆறுமுக நாவலர் சைவ ஆதீனங்களின் சார்பில் தீட்சிதர்களை எதிர்த்து அவர்கள் சைவ ஆதீனங்களின் கட்டுப்பாட்டின்கீழ் வரவேண்டும் என வாதிட்டார். இது உள்ளடக்கத்தில் தீட்சிதர்- கார்காத்த வேளாளர் சாதிச்சண்டையாகவும் இருந்தது

ஆறுமுக நாவலர் இராமலிங்க வள்ளலாரை எதிர்த்ததை வேளாளர்களுக்கும் தொண்டைமண்டல முதலியாருக்குமான தொன்மையான பூசலுடன் இருசாராரும் இணைத்துக் கொண்டனர்

சி.வை. தாமோதரம் பிள்ளை 1868-ல் தொல்காப்பியம் சொல்லதிகாரத்தை சேனாவரையர் உரையுடன் பதிப்பித்தபோது ஆறுமுக நாவலர் அதை பரிசோதித்து உதவினார். அவ்விளம்பரம் தினவர்த்தமானி இதழில் வெளிவந்தபோது 'இலக்கண இலக்கியங்களில் மகாவல்லவரும் ,சென்னை முதல் ஈழமீறாக உள்ள தமிழ்நாட்டு வித்துவான்களில் தமக்கு இணையில்லாதவருமாகிய...' என ஆறுமுக நாவலரைச் சுட்டிக்காட்டியிருந்தார்கள். அது தமிழக தமிழறிஞர்களை சீற்றமடையச் செய்தது. விவாதம் தமிழகம்- ஈழம் என இரு சாரியாகப் பிரிந்தது.

கண்டனங்கள்

இராமலிங்க வள்ளலாரின் அருட்பாவை ஆறுமுக நாவலர் எதிர்ப்பதனால் சீற்றமடைந்திருந்த வள்ளலார் தரப்பினர் திருவருட்பா தூஷண பரிகாரம் என்னும் நூலை வெளியிட்டனர். அதற்கு கண்டனம் எழவே வள்ளலாரின் மாணவராகிய நரசிங்கபுரம் வீராச்சாமி முதலியார் என்பவரைக்கொண்டு விஞ்ஞாபனப் பத்திரிகை என்னும் கண்டனநூலை வெளியிட்டனர். இந்நூல் ஆறுமுக நாவலரின் தமிழ்ப்புலமை, ஈழத்தவரின் தமிழ்ப்புலமை ஆகியவற்றை கடுமையாக கேலி செய்தது. அதற்கு பதிலாக சென்னை சிவபாதநேசப் பிள்ளை என்பவர் நல்லறிவு கொளுத்தல் என்னும் மறுப்புநூலை வெளியிட்டார். ஆறுமுக நாவலரின் அனுமதியுடன் எழுதப்பட்டது என்றும், அவரே அதை எழுதினார் என்றும் சொல்லப்படுகிறது. அந்நூலுக்கு வள்ளலார் தரப்பில் 'அகங்கார திமிர பானு' என்னும் கண்டனநூல் வெளியாகியது. இது தொழுவூர் வேலாயுத முதலியார் எழுதியது என ஆய்வாளர் கருதுகிறார்கள். ஆறுமுக நாவலர்

போலியருட்பா மறுப்பு என்னும் நூலை வெளியிட்டார்.அதற்குப் பதிலாக பன்னிரண்டு கண்டனநூல்கள் வெளியாயின. இவ்வாறு கண்டன நூல்கள் மாறிமாறி வெளியாயின. (பார்க்க <u>கண்டன வெளியீடுகள்</u>)

அவதூறு வழக்கு

ஜூன் 7, 1869-ல் சிதம்பரம் கோயிலில் பேரம்பலத்தில் தீட்சிதர்கள் ஆறுமுக நாவலருக்கு எதிராக ஒரு கண்டனக்கூட்டத்தை ஒருங்கிணைத்தனர். அதில் இராமலிங்க வள்ளலார் கலந்துகொண்டார். அதில் இராமலிங்க வள்ளலார் ஆறுமுக நாவலரை நா+அலர் என்று சொற்பிரிப்பு செய்து அலர் (வம்பு) கொண்டவர் என கண்டித்தார். அங்கிருந்த தில்லை தீட்சிதர்களின் தலைமை குழுவில் ஒருவரான சபாநடேச தீட்சிதர் நா என்னும் சொல்லை நாய் என பொருள்கொள்ளலாமா என்று கேட்க இராமலிங்க வள்ளலார் பேசாமலிருந்ததாகவும், சபா நடேசர் நாவலரை இழுத்துவந்து அடிக்கவேண்டும் என்று பேசியதாகவும் குற்றம்சாட்டப்பட்டது.


உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
இராமலிங்கபிள்ளை பாடல்
ஆபாச தர்ப்பணம்.
சென்னை
வேதாகமோக்த சைவசித்தாந்த சபையின்
பிரசுரம்.

கதிரைவேற்பிள்ளையின் கண்டனநூல்

செவிவழியாக அறியவந்த இந்நிகழ்வின் அடிப்படையில் ஆறுமுகநாவலர் மஞ்சக்குப்பம் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். முதல் எதிரி சபாநடேசர். இரண்டாம் எதிரி இராமலிங்க வள்ளலார். வழக்கு கடலூர் மஞ்சக்குப்பம் நீதிமன்றத்தில் இணைநீதிபதி ராபர்ட்ஸ் முன்னிலையில் 18 நவம்பர் 1869-ல் விசாரணைக்கு வந்தது. ஆறுமுக நாவலர் ஜி.பி.சௌந்தரநாயகம் பிள்ளையை வழக்கறிஞராக வைத்துக்கொண்டார். இராமலிங்க வள்ளலார் தரப்பில் திரு ஷோ (Show) வாதாடினார். வள்ளலார் தான் அவதூறாக எதையும் சொல்லவில்லை என மறுத்தார். அவர் மறுத்தபின் நிரூபிக்கவேண்டிய பொறுப்பு ஆறுமுக நாவலர் தரப்புக்கு வந்தது. ஆறுமுகநாவலரிடம் மேற்கொண்டு சாட்சிகளோ ஆதாரங்களோ இல்லை என்பதனால் வள்ளலார் தான் சொல்லவில்லை என மறுத்ததே தனக்கு போதும் என்று சொல்லி ஆறுமுக நாவலர்

குற்றச்சாட்டை திரும்பப் பெற்றார். சபாநடேச தீட்சிதர் தண்டிக்கப்பட்டார், இராமலிங்க வள்ளலார் விடுதலை செய்யப்பட்டார்

நூல்கள்

அருட்பா குழுவினர்

- திருவருட்பா தூஷண பரிகாரம்
- விக்ஞாபனப் பத்திரிகை
- அகங்கார திமிரபானு
- அறுமுகநாவலர் பரிசோதன தோஷப் பிரகாசிகை
- நடந்தவண்ணம் அறிவித்தம்
- பிரார்த்தனைப் பத்திரிகை
- போலியருட்பா மறுப்பின் கண்டனம் அல்லது குதர்க்க கரணிய நாச மகாபரசு
- தீவாந்திர சைவ வினோதம்
- பேரம்பலப் பிரசங்கம்
- இராமலிங்க அடிகளை தூஷிப்போரது பன்னிரு பொய்யகற்றல் அல்லது உண்மை தெரிவித்தல்
- திருவருட்பா விவாதிகளுக்கொரு விளக்கம்

மருட்பா குழுவினர்

- போலியருட்பா மறுப்பு
- குதர்க்க கரணிய நாச மகாபரசு கண்டனம்
- நல்லறிவுச் சுடர் கொளுத்தல்
- திராவிடப் பிரகாசிகை
- முக்குண வயத்தின் முறைமறைந்தறைதல்
- போலியருபா வழு திரட்டு
- போலிவாதிகளுக்கு புத்தி புகட்டல்
- போலியடுபா கண்டன மகாவித்வ கனசபை
- மருட்பா விவாத மத்தியக்ஷ பத்திரிகை
- சிவநிந்தை குருநிந்தை திருவருட்பாநிந்தையினாருக்கு செவியறிவுறுத்தல்
- குதர்க்கிகளின் பொய்க்கோள் விலக்கு
- இராமலிங்கப்பிள்ளை அங்கதப்பாட்டு
- இராமலிங்கப்பிள்ளை படிற்றொழுக்கம்
- திருவருணநெறி தமிழ்வேதப் பிரபாவம்
- போலியருட்பா கண்டன பிரசங்கம்
- பசுகரண விபரீதார்த்த நிக்கிரகமும் போலியடுபா கண்டன பரிகார மறுப்பும்
- இராமலிங்கம் பிள்ளை பாடல் ஆபச தர்ப்பணம் அல்லது மருட்பா மறுப்பு
- மருட்பா மறுப்பு அரங்கேற்றம்
- மருட்பா மறுப்பு விஜய மகாசரபம்

விவாதித்தவர்கள்

அருட்பா குழுவினர்

- இராமலிங்க வள்ளலார்
- தொழுவூர் வேலாயுத முதலியார்
- அட்டாவதானம் வீராச்சாமிச் செட்டியார்

- இறுக்கம் ரத்தின முதலியார்
- பூவை கலியாணசுந்தர முதலியார்
- நாகப்பட்டினம் வேதாசலம் பிள்ளை
- திருமயிலை சண்முகம் பிள்ளை
- காஞ்சீபுரம் சபாபதி முதலியார்
- திருத்தணிகை விசாகப்பெருமாள் ஐயர்
- சேமங்கலம் நாராயண முதலியார்
- தீவிக்கோட்டை முத்துசாமிப்பிள்ளை
- நரசிங்கபுரம் வீராச்சாமி முதலியார்
- சண்முக முதலியார்
- புதுவை வேலு முதலியார்
- சிவானந்தபுரம் செல்வராய முதலியார்
- ம.தி.பானுகவி
- கூடலூர் விஸ்வலிங்க முதலியார்
- மறைமலையடிகள்
- பரமஹம்ச ஆத்மாராம் சுவாமி
- செய்குத்தம்பி பாவலர்
- தஞ்சை சண்முகம் பிள்ளை
- ப.முருகேச முதலியார்
- மா பழனி முதலியார்

மருட்பா குழுவினர்

- ஆறுமுக நாவலர்
- திருவாவடு துறை ஆதீனகர்த்தச் சுப்ரமணிய தேசிகர்
- வேதாரண்யம் ஆதீனம் உதயமூர்த்தி
- திருவண்ணாமலை ஆதீகம் ஆறுமுகத் தம்பிரான்
- தருமபுரம் ஆதீகம் சண்முகத் தம்பிரான்
- மகாவித்வான் மதுரை இராமசாமிப்பிள்ளை
- மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை
- மகாவித்வான் கோ.சாமிநாத தேசிகர்
- உ. வே.சாமிநாதையர்
- திருவாவடு துறை சபாபதி நாவலர்
- மேலைப்புலோலி நா.கதிரைவேற் பிள்ளை
- தணிகாசல முதலியார்
- திரு.வி. கல்யாணசுந்தர முதலியார்
- பா.சி.முருகேசமுதலியார்
- கல்குளம் குப்புசாமி முதலியார்

குறிப்புகள்

- இக்கட்டுரை ப. சரவணன் ஆய்வாளர் எழுதிய அருட்பா-மருட்பா, அருட்பா மருட்பா கண்டனத் திரட்டு என்னும் இருநூல்களின் செய்திகளைக் கொண்டு எழுதப்பட்டது.

சமரச சுத்த சன்மார்க்க சங்கம்

https://ta.wikipedia.org/wiki/%E0%AE%9A%E0%AE%AE%E0%AE%B0%E0%AE%9A_%E0%AE%9A%E0%AF%81%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4_%E0%AE%9A%E0%AE%A9%E0%AF%8D%E0%AE%AE%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95_%E0%AE%9A%E0%AE%99%E0%AF%8D%E0%AE%95%E0%AE%AE%E0%AF%8D

சமரச சுத்த சன்மார்க்க சங்கம், வள்ளலார் என அனைவராலும் அன்புடன் அழைக்கப்படும் இராமலிங்க அடிகளாரால் நிறுவப்பட்டது. இவர் சிதம்பரத்திற்கு அருகில் உள்ள மருதூர் என்னும் கிராமத்தில் 1823 ஆம் ஆண்டு பிறந்தார். 19-ம் நூற்றாண்டில் தமிழகத்தில் தோன்றிய சமூக-சமய சீர்திருத்த இயக்கத்தில் முக்கியப் பங்கு வகித்தார். இவர் ஆன்மீகத்தில் கொண்ட பற்று காரணமாக அவரது பாடல்களில் சமுதாய சீர்திருத்தங்கள் மற்றும் சமய உணர்வுகள் இரண்டறக் கலந்திருந்தன. ஆன்மீக விழிப்புணர்வு வாயிலாக சமூகத்தில் நிலவும் தீமைகளைக் களையமுடியும் என்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்.

சாதி வேறுபாடற்ற சமுதாயம்

இராமலிங்க அடிகள், தமிழ் மக்களிடையே சமய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்தினார். கடவுள் வழிகாட்டுதலால் மட்டுமே சாதி வேறுபாடற்ற சமுதாயத்தை உருவாக்க முடியும் என்று எடுத்துரைத்ததோடு “இறைவன் ஜோதி வடிவானவன்” என்றும் ’அருட்பெரும் ஜோதியாக’ இருக்கிறார் என்றும் குறிப்பிட்டார். இவர் பிறப்பினால் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளை எதிர்த்தார். சாதி சமூக வேறுபாடுகள் அர்த்தமற்றவை என்று குறிப்பிட்டதோடு அன்பு மற்றும் சகோதரத்துவம் நிலவவேண்டும் என்றும் பாடுபட்டார்.

சத்திய தருமசாலை

பசி மற்றும் வறுமையே சமுதாயத்தின் அனைத்துத் தீமைகளுக்கும் காரணம் என வள்ளலார் நம்பினார். ஏழைக்கு உணவு அளிப்பதே சிறந்த வழிபாடு என உறுதியாக நம்பினார். எனவே ஏழைகளின் பசியை நீக்குவதற்காக ”சத்திய தருமசாலையை” வடலூரில் நிறுவினார். சத்திய தருமசாலையின்

தொடக்க நாளன்று அடுப்பிற்குத் தீமூட்டி இந்தத் தீ எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கட்டும், அப்போது தான் ஏழைகளுக்கு எப்பொழுதும் உணவு அளிக்க முடியும் என உறுதியுடன் கூறினார். இவர் மேற்கொண்ட உறுதிமொழிக்கு ஏற்றவண்ணம் ஆண்டு முழுவதும் சாதி சமய வேறுபாடின்றி அனைவருக்கும் உணவு அளிக்கப்பட்டு வருகிறது.

ஜீவகாருண்யம்

வள்ளலார் அன்பு வழியில் ஆன்மீகத்தை அடையலாம் என உறுதியாக நம்பினார். ஆகவே மனிதர்களிடத்து மட்டுமன்றி தாவரங்கள், புழு, பூச்சிகள் மற்றும் விலங்குகள், பறவைகள் போன்ற அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செலுத்தினார். இதனையே "ஜீவகாருண்யம்" என்று அழைக்கிறோம்.

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' எனக் கூறிய வள்ளலார், உயிர்களிடத்து எவ்வளவு அன்பு கொண்டிருந்தார் என்பதை அரியலாம். மூடப்பழக்கங்களையும், சமய சடங்குகளையும் எதிர்த்த வள்ளலார் உணவுக்காக விலங்குகள் கொல்லப்படுவதை வன்மையாக கண்டித்தார். சைவ உணவிற்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

திருவருட்பா

மனித இனத்திற்கு செய்யும் தொண்டே மோட்சத்தை அடைவதற்கான வழி என்பது வள்ளலாரின் போதனைகளில் மிக முக்கியமானதாகும். கடவுள், கருணை மற்றும் அறிவு வடிவமாகத் திகழ்கிறார். ஆகவே கடவுளை அடையும் வழி உயிர்களிடத்து காட்டும் கருணையும், இரக்கமும் ஆகும் என்று குறிப்பிட்டார்.

தியானம் செய்வதே வழிபாடு என்று கருதினார்.1870-ஆம் ஆண்டு சத்திய ஞான சபையை நிறுவினார். இங்கு வழிபாட்டுக் கூட்டங்கள் மத வேறுபாடின்றி நடைபெறுவதை உறுதிப்படுத்தினார். இவரது பக்திப் பாடல்கள் தொகுக்கப்பட்டு, அத்தொகுப்பு 'திருவருட்பா' என்றழைக்கப்படுகிறது.






திருவருட்பா

திருவருட்பா என்பது 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வடலூர் இராமலிங்க வள்ளலார் (வள்ளலார்) பாடிய 5,818 பாடல்களின் தொகுப்பாகும். இது **ஆறு திருமுறைகளாகப்** பிரிக்கப்பட்டுள்ளது. அன்பு, கருணை, ஜீவகாருண்யம், மற்றும் ஆன்மீக அனுபவங்களை வலியுறுத்தும் இப்படைப்பு, மரணமிலாப் பெருவாழ்வை இலக்காகக் கொண்டு, அருட்பெருஞ்ஜோதி அகவல் உட்பட பல பாடல்களைக் கொண்டுள்ளது.

திருவருட்பாவின் முக்கிய அம்சங்கள்:

- **படைப்பாளி:** இராமலிங்க அடிகள் (வள்ளலார்).
- **பாடல்களின் எண்ணிக்கை:** 5,818 பாடல்கள்.
- **பகுப்பு:** ஆறு திருமுறைகள் (1867-1888 காலகட்டத்தில் தொகுக்கப்பட்டது).
- **பொருள்:**
  இறைவனை ஜோதி வடிவில் (அருட்பெருஞ்ஜோதி) வணங்குதல் மற்றும் ஆன்மநேய ஒருமைப்பாடு.
- **வள்ளலாரின் கொள்கை:** "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்ற கருணை கொள்கை மற்றும் பசிப்பிணி

போக்கும் 'சத்திய தருமச்சாலை' கொள்கைகள் பாடல்களில் வெளிப்படுகின்றன.

- **தொகுப்பு:** இந்த பாடல்கள் Vallalar.org மற்றும் Thiruarutpa.org ஆகிய இணையதளங்களில் முழுமையாகக் கிடைக்கின்றன.

திருவருட்பா, சைவத் திருமுறைகளான பன்னிரு திருமுறைகளிலிருந்து வேறுபட்டது, இருப்பினும் இது மக்களிடையே ஆன்மீக மற்றும் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்திய ஒரு முக்கிய நூலாகும்.

திருவருட்பா என்பது வள்ளலார் பாடிய 5818 பாடல்களின் தொகுப்பாகும். ஆசிரிய விருத்த நடையில் பாடப்பட்டுள்ள இப்பாடல்கள் ஆறு தொகுப்புகளாக (இத்தொகுப்புகள் திருமுறை எனவும் அவரது தொண்டர்களால் வழங்கப்படுகின்றன, எனினும் சைவத்திருமுறைகளான பன்னிரெண்டு திருமுறைகள் வேறு.) தொகுக்கப்பட்டுள்ளன. இப்பாடல்கள் தம்முடைய சுய அனுபவங்களையும் ஆன்மீக பெரு உணர்வையும் விளம்புவன என்றும் அவற்றை வணிக முறையில் பதிப்பிக்க வேண்டாம் என்றும் வள்ளலார் கேட்டுக்கொண்டார். எனினும், வள்ளலாரின் தொண்டர்கள் அவரிடம் தொடர்ந்து வலியுறுத்தி இப்பாடல்களை பதிப்பிப்பதற்கான அனுமதியைப் பெற்றனர்.

[01] வள்ளலார் அருளிய திருவருட்பா | சிறப்பு தமிழ் பக்தி பாடல்கள் தொகுப்பு |
https://www.youtube.com/watch?v=oidvHEhn8ec
[2:31:14]

[02] https://www.thiruarutpa.org/

[03] https://www.vallalar.org/

[04] https://vallalar.org/Tamil/V000009439B

[05] https://vallalarsongs.com/

[06] https://www.tamilvu.org/ta/library-l5F31-html-l5F31ind-144969

இராமலிங்க அடிகள் கொள்கைகள்

1. இறந்தவர்களை எரிக்கக் கூடாது. சமாதி வைத்தல் வேண்டும்
2. எதிலும் பொது நோக்கம் வேண்டும்
3. எந்த உயிரையும் கொல்லக்கூடாது
4. எல்லா உயிர்களும் நமக்கு உறவுகளே. அவற்றைத் துன்புறுத்தக்கூடாது
5. சிறு தெய்வ வழிபாடு கூடாது. அவற்றின் பெயரால் பலி இடுதலும் கூடாது
6. பசித்தவர்களுக்கு சாதி, மதம், இனம், மொழி முதலிய வேறுபாடு கருதாது உணவளித்தல் வேண்டும்
7. புலால் உணவு உண்ணக்கூடாது
8. கடவுள் ஒருவரே. அவர் அருட்பெருஞ்சோதி ஆண்டவர்
9. சாதி, மதம், இனம், மொழி முதலிய வேறுபாடு கூடாது
10. மத வெறி கூடாது

வளரும் பிள்ளைகளுக்கு வள்ளலார் வழங்கிய அறிவுரைகள்

1. நல்லோர் மனதை நடுங்கச் செய்யாதே
2. தானம் கொடுப்போரைத் தடுத்து நிறுத்தாதே
3. மனமொத்த நட்புக்கு வஞ்சகம் செய்யாதே
4. ஏழைகள் வயிறு எரியச் செய்யாதே
5. பொருளை இச்சித்துப் பொய் சொல்லாதே
6. பசித்தோர் முகத்தைப் பாராதிராதே
7. இரப்போர்க்குப் பிச்சை இல்லை என்னாதே
8. குருவை வணங்கக் கூசி நிற்காதே
9. வெயிலுக்கு ஒதுங்கும் விருட்சம் அழிக்காதே
10. தந்தை தாய் மொழியைத் தள்ளி நடக்காதே.
11. பிறரை இகழ்ந்து பேசாதே..
12. பிற உயிர்களிடமும் அன்பு கொள்க..

ஜோதி (1939 திரைப்படம்)

https://ta.wikipedia.org/wiki/%E0%AE%9C%E0%AF%8B%E0%AE%A4%E0%AE%BF_(1939_%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B0%E0%AF%88%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%9F%E0%AE%AE%E0%AF%8D)

ஜோதி



திரைப்பட சுவரொட்டி

இயக்கம்	டி. ஆர். ரகுநாத்
கதை	சி. ஏ. லட்சுமணதாஸ்
திரைக்கதை	பம்மல் சம்பந்த முதலியார்
இசை	மதுரை மாரியப்பா சுவாமிகள்
நடிப்பு	கே. ஏ. முத்து பாகவதர் பி. ஜி. வெங்கடேசன் வி. பி. இராமையா எம். ஜி. சக்கரபாணி செல்வி மதுரை ஏ. சுந்தரம் சரவணபவானந்தர்

	என். எஸ். கிருஷ்ணன் டி. ஏ. மதுரம்
ஒளிப்பதிவு	ஏ. கபூர்
கலையகம்	ஜோதி பிக்சர்ஸ்
வெளியீடு	மார்ச் 16, 1939 (India)
ஓட்டம்	19,000 அடி
நாடு	இந்தியா
மொழி	தமிழ்

ஜோதி (*அல்லது ஸ்ரீ ஜோதி இராமலிங்க சுவாமிகள்*) ஒரு இந்தியத் தமிழ்த் திரைப்படமாகும். டி. ஆர். ரகுநாத் இயக்கத்தில் 1939 ஆம் ஆண்டு வெளியான இத்திரைப்படம் *வள்ளலார்* எனப் பிரபலமாக அறியப்படும் இராமலிங்க சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டதாகும்.

நடிகர்கள்

இராமலிங்க அடிகளாக கே. ஏ. முத்து பாகவதர்

பி. ஜி. வெங்கடேசன்

இராமலிங்க அடிகளாகளாரின் தந்தை இராமையாவாக வி. பி. இராமையா பிள்ளை

எம். ஜி. சக்ரபாணி

டி. வி. ஜனகம்

கே. எஸ். சங்கர ஐயர்

கே. எஸ். வேலாயுதம்

இராமலிங்க அடிகளாகளாரின் தாயாக செல்வி மதுரை ஏ. சுந்தரம் சரவணபவானந்தர்

என். எஸ். கிருஷ்ணன்

டி. ஏ. மதுரம்

பி. எஸ். கிருஷ்ணவேணி

எம். ஆர். சுவாமிநாதன்

கே. கே. சௌந்தர்

பி. கோபால்

எம். ஆர். சுப்பிரமணியம்

வி. நடராஜ்

மாஸ்டர் ராமுடு

இளைஞர் இராமலிங்க அடிகளாக *மாஸ்டர்* மகாதேவன் ராஜாம்மாள்

டி. எம். பட்டம்மாள்

எம். எஸ். கண்ணம்மாள்
ஹெச். எஸ். தெளகார்
எஸ். ஆர். சாமி
ராமலட்சுமி
குழந்தை இராமலிங்க அடிகளாக *மாஸ்டர் முத்து*

தயாரிப்புக் குழு

- இயக்குநர்: *டி. ஆர். ரகுநாத்*
- திரைக்கதை: *பம்மல் சம்பந்த முதலியார்*
- வசனம்: *சி. ஏ. லட்சுமணதாஸ்*
- ஒளிப்பதிவு: *ஏ. கபூர்*
- ஒலிப்பதிவு: *வி. பி. தாத்தே*
- கலையகம்: *பாரத் லட்சுமி பிக்சர்ஸ் ஸ்டுடியோ (கல்கத்தா)*

பாடல்கள்

மதுரை மாரியப்பா சுவாமிகள் பாடல்களை எழுதி இசையமைத்தார். இதுவே அவர் இசையமைத்த முதல் திரைப்படம்.[1]

படத்தில் நிறைய பாடல்கள் இருந்தன. அவற்றுள் பல பிரபலமடைந்தன. ஏ. வி. மெய்யப்பச் செட்டியாருக்குச் சொந்தமான ஓடியோன் ரெக்கார்டு கம்பெனி இப் படத்தின் பாடல்களை இசைத்தட்டுகளாக வெளியிட்டது.

- *விபவசுகுண தேவா* (பாடியவர்: பி. ஜி. வெங்கடேசன்
- *பிரம்மன் எழுத்தினால்* (பாடியவர் பி. ஜி. வெங்கடேசன்)
- *அருள்ஜோதி தெய்வமெனை ஆண்டு கொண்ட தெய்வம்* (பாடியவர்: பி. ஜி. வெங்கடேசன்)

வெளியீடு

1939, மார்ச், 16 அன்று வெளியான இப்படம் 18 வாரங்கள் ஓடி வெற்றிப்பெற்றது. என்றாலும் இப்படத்தின் எந்தப் பிரதியும் தற்போது இல்லை.

வள்ளலார் பற்றிய முதல் திரைப்படம்

https://www.hindutamil.in/news/cinema/tamil-cinema/1216292-ramalinga-swamigal-vallalar-movie-name-jothi.html



செய்திப்பிரிவு

ஜோதி பிக்சர்ஸ் தயாரித்த இந்தப் படம்,வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன் என்ற வள்ளலார் என்றழைக்கப்படும் ராமலிங்க அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றை மையப்படுத்தி உருவானது. இதற்கு ஸ்ரீராமலிங்கஸ்வாமிகள் என்று இன்னொரு டைட்டிலும் வைக்கப்பட்டது.

அனைவரும் சமம், பிறப்பால் ஏற்றத்தாழ்வுகள் கூடாதுஎன்ற கருத்துகளை பேசிய வள்ளலாரின் கதையை கொண்ட இந்தப் படத்தை டி.ஆர்.ரகுநாத் இயக்கினார். இவர், அசோக்குமார் (1941), ராஜமுக்தி (1948) உள்ளிட்ட படங்களை இயக்கிய ராஜா சந்திரசேகரின் சகோதரர். ஒலிப்பதிவாளராக வாழ்க்கையைத் தொடங்கிய ரகுநாத், தனது சகோதரர் படங்களில் பணியாற்றிய பின் இயக்குநரானார்.

இதன் திரைக்கதையை பம்மல் சம்பந்த முதலியார் எழுதினார். சி.ஏ.லக்ஷ்மண தாஸ் வசனம் எழுதிய இந்தப் படத்துக்கான பாடல்களை எழுதி, மதுரை மாரியப்ப சுவாமிகள் இசை அமைத்தார்.

ராமலிங்க அடிகளாக கே.ஏ.முத்துபாகவதர் நடித்தார். பி.ஜி.வெங்கடேசன், எம்.ஜி.சக்கரபாணி, டி.வி.ஜனகம், கே.எஸ்.சங்கர ஐயர், கே.எஸ்.வேலாயுதம், டி.ஏ.மதுரம், பி.எஸ்.கிருஷ்ணவேணி, மாஸ்டர் ராமுடு, டி.எம்.பட்டம்மாள். எம்.எஸ் கண்ணம்மாள், எஸ்.ஆர்.சாமி, ராமலட்சுமி உட்பட பலர் நடித்தனர். ஏ.கபூர் ஒளிப்பதிவு செய்த இதன்

படப்பிடிப்பு கொல்கத்தாவில் உள்ள பாரத் லட்சுமி பிக்சர்ஸ் ஸ்டூடியோவில் நடந்தது.

ராமலிங்க அடிகளாரின் தந்தை ராமையாவாக பழம்பெரும் நட்டுவனார் வி.பி.ராமையா பிள்ளை, அம்மாவாக செல்வி மதுரை ஏ.சுந்தரம் நடித்தனர். ராமலிங்க அடிகளின் மூன்று பருவத்தில் வெவ்வேறு நடிகர்கள் நடித்தனர். குழந்தையாக மாஸ்டர் ராமுடு, வாலிப பருவத்தில் மாஸ்டர் மகாதேவன், பெரியவராக முத்து பாகவதர் நடித்தனர்.

என்.எஸ்.கிருஷ்ணன், டி.ஏ.மதுரம், எம்.ஆர்.சுவாமிநாதன் நகைச்சுவை காட்சிகளில் நடித்தனர். பெரும்பாலான பாடல்கள் ஹிட்டாயின.

1939-ம் ஆண்டு இதே தேதியில் வெளியான இந்தப் படம், 18 வாரங்கள் ஓடின. வெற்றி பெற்ற இந்தப் படத்தின் பிரதி இப்போது இல்லை என்பது சோகம்.பிறகு 1971-ல் ஏ.டி.கிருஷ்ணசாமி இயக்கத்தில் வள்ளலாரின் வாழ்க்கை 'அருட்பெருஞ்ஜோதி' என்ற பெயரில் திரைப்படமானது.

அருட்பெருஞ்ஜோதி

https://ta.wikipedia.org/wiki/%E0%AE%85%E0%AE%B0%E0%AF%81%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%AA%E0%AF%86%E0%AE%B0%E0%AF%81%E0%AE%9E%E0%AF%8D%E0%AE%9C%E0%AF%8B%E0%AE%A4%E0%AE%BF

அருட்பெருஞ்ஜோதி



இயக்கம் ஏ. டி. கிருஷ்ணசாமி

தயாரிப்பு	டி.எஸ்.பாலச்சந்திரன் பாலு பிலிம்ஸ்
இசை	டி. ஆர். பாப்பா
நடிப்பு	நாகராஜன் தேவகி
வெளியீடு	சூன் 5, 1971
ஓட்டம்	.
நீளம்	3971 மீட்டர்
நாடு	இந்தியா
மொழி	தமிழ்

அருட்பெரும்ஜோதி (*Arutperunjothi*) 1971 ஆம் ஆண்டு சூன் மாதம் 5 ஆம் தேதியன்று வெளிவந்த தமிழ்த் திரைப்படமாகும்.[1] ஏ. டி. கிருஷ்ணசாமி இயக்கத்தில் வெளிவந்த இத்திரைப்படத்தில் நாகராஜன், தேவகி மற்றும் பலர் நடித்திருந்தனர்.[2][3] ஏ.டி.கிருட்டிணசாமிக்கு இது கடைசித் திரைப்படமாகும்.[4]

நடிகர்கள்

- நாகராஜன்
- தேவகி
- பாலையா
- கே. ஏ. தங்கவேலு
- பண்டரிபாய்
- மாஸ்டர் ஸ்ரீதர்

பாடல்கள்

பாடல்	பாடகர்(கள்)	பாடலாசிரியர்
அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி	வி. என். சுந்தரம், எஸ். ஜானகி	

திருஓங்கு புண்ணியச் செயல் ஓங்கி அன்பருள்	கண்டசாலா	
நீருண்டு பொழிகின்ற காருண்டு விளைகின்ற		
சீர் கொண்ட தெய்வ வதனங்கள் ஆறும்		
அழுத பிள்ளைக்கே பால் உணவளிப்பாள்		
தாயிலார் என நெஞ்சகம் தளர்ந்தேன்		
பெற்ற தாய் தனை மக மறந்தாலும்		
பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும் படிக்கப் பக்கம் நின்று கேட்டாலும்		
வருவார ழைத்துவாடி வடலூர் வடதிசைக்கே வந்தாற் பெறலாம்நல்ல வரமே		
அருட்சோதித் தெய்வம் எனை ஆண்டுகொண்ட தெய்வம், அம்பலத்தே		

ஆடுகின்ற ஆனந்தத் தெய்வம்	

Movie:

https://www.youtube.com/watch?v=-XjESEybjTY

இராமலிங்க அடிகள்

'தமிழ் வாகைச்செம்மல்' 'கலைமாமணி'
'ஆய்வுத் தமிழரசு', 'தமிழ்மறைச் செம்மல்'
பேராசிரியர்
டாக்டர் **ந. சுப்புரெட்டியார்**
M.A., B.Sc., L.T., Vidwan., Ph.D., D.Lit.,
(1) வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர்,
தமிழ் இலக்கியத் துறை, செ.ப.க.
(2) மதிப்பியல் இயக்குநர், தெற்கு தென்கிழக்கு ஆசிய
நாடுகளின் மரபுவழிப் பண்பாட்டு நிறுவனம்
மணிப்பொறிக் கட்டடம், சேப்பாக்கம்,
சென்னைப் பல்கலைக் கழகம்

கலைஞன் பதிப்பகம்
19 கண்ணதாசன் சாலை,
தியாகராய நகர் சென்னை - 600 017.

https://www.tamilvu.org/library/nationalized/pdf/35-subbureddiyar/515-eramalingaadigal.pdf



வள்ளலார் என்று அழைக்கப்படும் அருட்பிரகாச இராமலிங்க அடிகளாரின் சிறப்பு அஞ்சல் தலை, இந்திய அரசால் **ஆகஸ்ட் 17, 2007** அன்று வெளியிடப்பட்டது.

அஞ்சல் தலை விவரங்கள்:

- **வெளியிடப்பட்ட நாள்:** 17 ஆகஸ்ட் 2007
- **வழங்கியவர்:** இந்திய அஞ்சல் துறை (India Post)
- **மதிப்பு:** ₹5
- **சிறப்பு:** இது ஒரு நினைவு அஞ்சல் தலை (Commemorative Stamp) ஆகும்.

சென்னையில் நடைபெற்ற விழாவில் அப்போதைய மத்திய தகவல் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் ஆ.ராசா, தமிழக முதல்வர் மு. கருணாநிதி ஆகியோர் முன்னிலையில் இந்த அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.

திருவருட்பிரகாச வள்ளலாரின் படத்துடன் கூடிய, 2007 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அந்த நினைவு அஞ்சல் தலையை Indphila போன்ற வலைத்தளங்களில் பார்க்கலாம்.

அகர முதல

அனைத்தும் அறிவோம்! அன்னைத் தமிழில்!

வள்ளலார் நூல்கள் பதிவிறக்கங்களுக்குக் கட்டணமில்லா இணைப்புகள்

http://www.akaramuthala.in/news/%E0%AE%B5%E0%AE%B3%E0%AF%8D%E0%AE%B3%E0%AE%B2%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D-%E0%AE%A8%E0%AF%82%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D-%E0%AE%AA%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%B1%E0%AE%95/



வள்ளலார் இராமலிங்க அடிகளாரின் நூல்கள், அவர் பதிப்பித்த நூல்கள், அவர் நூல்களுக்கான பிறர் உரைகள், அவர் தொடர்பான நூல்களை இணைய வழியில் படிப்பதற்குப் பின்வரும் இணைப்புகளில் காண்க

சீவகாருண்ய ஒழுக்கம்

- சீவகாருண்ய ஒழுக்கம் – 1
- சீவகாருண்ய ஒழுக்கம் – 2
- சீவகாருண்ய ஒழுக்கம் – 3

உரைநடை

திருவருண் மெய்ம்மொழி

- அருள்நெறி
- பேருபதேசம்

- [நித்திய கரும விதி]
- [உபதேசக் குறிப்புகள்]
- [மனு முறைகண்ட வாசகம்]
- [தொண்டமண்டல சதகம்]
- [வழிபடு கடவுள் வணக்கப் பாட்டுரை]
- [“உலகெலாம்” என்னும் மெய்ம்மொழிப்பொருள் விளக்கம்]

புத்தகங்கள்

- [திருவருட்பா]

- [முதல் ஐந்து திருமுறைகள்]

- [ஆறாம் திருமுறை]
- [மரணமிலாப் பெருவாழ்வு சம்பந்தபட்ட பாடல்கள்]
- [திருவருட்பா உரைநடை]

- [வள்ளலார் பதிப்பித்தவை]
- [சின்மய தீபிகை]
- [ஒழிவில் ஒடுக்கம்]

- [வரலாற்றுப் புத்தகங்கள்]
- [சித்தி வளாகம்]
- [தமிழ் மண்ணின் தந்தை வள்ளலார் வாழ்கிறார்]
- [இரமலிங்க அடிகள் வரலாறு]
- [அகவல் உரை விளக்கம்]
- [அருட்பெருஞ் ஜோதி அகவல் முன்னுரை]
- [அருட்பெருஞ் ஜோதி அகவல் உரை]
- [திருவருட்பா விளக்கவுரைகள்]
- [மகா தேவ மாலை – 1]
- [மகா தேவ மாலை – 2 நெஞ்சறிவுறுத்தல் – 1]
- [நெஞ்சறிவுறுத்தல் – 2]
- [திருவருள் முறையீடு – 1]
- [திருவருள் முறையீடு – 2]
- [வடிவுடைய மாணிக்கமாலை விண்ணப்ப கலிவென்பா – 1]
- [விண்ணப்ப கலிவென்பா – 2]
- [ஆராய்வுகள்]
- [பாரதியாரும் வள்ளலாரும்]

வள்ளலார் வரலாறு

https://vallalar.net/vallalar/vallalar_history_tamil.htm

தமிழ்நாட்டில் & சிதம்பரத்தில் இருந்து இருபது கிலோ மீட்டர் தொலைவில் கடலூருக்கு அருகே அமைந்திருக் கும் கிராமம் மருதூர்.

இந்த ஊரின் கணக்குப்பிள்ளை யாகவும் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லித்தரும் ஆசிரியராகவும் விளங்கியவர் ராமையா. இவர் மனைவி பெயர் சின்னம்மை.

ராமையா&சின்னம்மை தம்பதிக்கு ஐந்து குழந்தைகள் பிறந்தன. சபாபதி, பரசுராமர் என்ற ஆண் குழந்தைகளும் உண்ணாமுலை, சுந்தரம்மாள் என்ற பெண் மக்களும் பிறந்து, ஐந்தாவதாக 1823-ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 5-ஆம் நாள் ஞாயிறு மாலை 5.54 மணியளவில் ஓர் ஆண்குழந்தை பிறந்தது. குழந்தைக்கு ராமலிங்கம் எனப் பெயர் சூட்டினர்.

ராமலிங்கம் பிறந்த ஆறாவது மாதத்தில் தந்தை ராமையா காலமானார். சின்னம்மை, தன் குழந்தைகளின் கல்வி மற்றும் எதிர்காலம் கருதி சென்னைக்கு வந்து சேர்ந்தார்.

மூத்த மகன் சபாபதி, காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதியிடம் கல்வி பயின்றார். புராணச் சொற்பொழிவில் வல்லவரானார். சொற்பொழிவுகளுக்குச் சென்று வருவதன் மூலம் கிடைக்கும் பொருளை வைத்துக் குடும்பம் நடத்தி வந்தார்.

சபாபதியே, தம்பி ராமலிங்கத்துக்குக் கல்வி கற்பித்தார். பிறகு, தான் பயின்ற காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதியிடம் கல்வி பயில அனுப்பினார்.

ஒருகட்டத்தில் மீண்டும் சென்னைக்கே வந்த ராமலிங்கம் அடிக்கடி கந்தசாமி கோயிலுக்குச் சென்றார். கந்தகோட்டத்து முருகனை வழிபட்டு மகிழ்ச்சியடைந்தார். இளம்வயதிலேயே இறைவன்மீது பாடல்கள் இயற்றிப் பாடினார்.

பள்ளிக்கும் போகாமல், வீட்டிலும் தங்காமல் கோயில்களில் சுற்றிவந்த ராமலிங்கத்தை அண்ணன் சபாபதி கண்டித்தார். ஆனால், ராமலிங்கம் அவருக்குக் கட்டுப்படவில்லை. எனவே, அண்ணன் தன் மனைவி பாப்பாத்தி அம்மாளிடம் ராமலிங்கத்துக்குச் சாப்பாடு போடுவதை நிறுத்துமாறு கடுமையாக உத்தரவிட்டார். பாசமான அண்ணியின் வேண்டுகோளுக்கு இணங்கிய ராமலிங்கம், வீட்டில் தங்கிப் படிப்பதாக உறுதியளித்தார்.

ராமலிங்கத்துக்கு வீட்டில் மாடியறை ஒதுக்கப்பட்டது. புத்தகங்களோடு அவர் மாடியறைக்குச் சென்றார். சாப்பிடும் நேரம் தவிர, மற்ற நேரங்களில் அறையிலேயே தங்கி முருக வழிபாட்டில் தீவிரமாக ஈடுபட்டார். ஒரு நாள் சுவரிலிருந்த முகம் பார்க்கும் கண்ணாடியில் தணிகை முருகன் தனக்குக் காட்சியளித்ததாகப் பரவசப்பட்டுப் பாடல்கள் பாடினார்.

புராணச் சொற்பொழிவு செய்யும் அண்ணன் சபாபதிக்கு, ஒருமுறை உடல்நலம் குன்றியதால் ஒப்புக்கொண்ட சொற்பொழிவுக்குச் செல்ல முடியவில்லை. எனவே அவர், தம்பி ராமலிங்கத்திடம் சொற்பொழிவு நடக்கவுள்ள இடத்துக்குச் சென்று, சில பாடல்களைப் பாடி, தான் வரமுடியாத குறையைத் தீர்த்துவிட்டு வருமாறு கூறினார். அதன்படி ராமலிங்கம் அங்கு சென்றார்.

அன்றைய தினம் சபாபதியின் சொற்பொழிவைக் கேட்க ஏராளமானோர் கூடியிருந்த னர். அண்ணன் சொன்ன படியே சில பாடல்களை மனமுருகப் பாடினார் ராமலிங்கம். இதன்பின், அவரிடம் ஆன்மிகச் சொற்பொழிவு நிகழ்த்துமாறு அங்கு கூடியிருந்தோர் வெகுநேரம் வற்புறுத்தினர். எனவே, ராமலிங்கமும் அதற்கு இசைந்தார்.

அந்தச் சொற்பொழிவு இரவில் நெடுநேரம் நிகழ்ந்தது. அனைவரும் வியந்து போற்றினர். இதுவே அவருடைய முதல் சொற்பொழிவு. அப்போது அவருக்கு வயது ஒன்பது.

ராமலிங்கம் தன் பன்னிரண்டாம் வயதில் திருவொற்றியூர் சென்று வழிபடத் தொடங்கினார். அவர் வசித்துவந்த ஏழுகிணறு பகுதியிலிருந்து திருவொற்றியூருக்குத் தினமும் நடந்தே சென்று வழிபட்டு வருவது அவர் வழக்கம்.

பலரது வற்புறுத்தலுக்கு இணங்க, ராமலிங்கம் தன் இருபத்தேழாவது வயதில் திருமணத்துக்குச் சம்மதித்தார். அவர் சகோதரி உண்ணாமுலையின் மகள் தனக்கோடியைத் திருமணம் செய்துகொண்டார். ராமலிங்கம் அமைதியை நாடியவர். கடவுள் என்றால் என்ன என்று அறிய விரும்பியவர். எனவே, 1858&ஆம் ஆண்டு சென்னையிலிருந்து புறப்பட்டுப் பல தலங்களைத் தரிசித்து சிதம்பரத்தை அடைந்தார்.

அங்கே அவரைக் கருங்குழி கிராமத்து மணியக்காரரான திருவேங்கடம் என்பவர் சந்தித்துத் தன் ஊரில், தன் இல்லத்தில் வந்து தங்கியிருக்குமாறு வேண்டிக்கொண்டார். அவரது அன்புக்குக் கட்டுப்பட்ட ராமலிங்கம் மணியக்காரரின் இல்லத்தில் ஒன்பது வருடங்கள் தங்கியிருந்தார்.

ராமலிங்கம் தங்கியிருந்த அறையில் விளக்குக்கு எண்ணெய் வைக்கும் மண்கலயம் ஒரு நாள் உடைந்துவிட, மணியக்காரரின் மனைவி புதுக்கலயம் ஒன்றை வைத்தார். அந்தக் கலயம் பழக்கப்பட வேண்டுமென்று அதில் நீர் நிரப்பிவைத்த மணியக்காரரின் மனைவி, பின்னர் அதைச் சுத்தப்படுத்தி எண்ணெய் நிரப்பிவைக்க மறந்துபோனார்.

அன்றிரவு ராமலிங்கம் வெகுநேரம் எழுதிக் கொண்டிருந் தார். விளக்கில் ஒளி மங்கும்போதெல்லாம் கலயத்தில் இருந்த நீரை, எண்ணெய் என்று கருதி விளக்கில் ஊற்றிக் கொண்டே இருந்தார். விடியும்வரை விளக்கு பிரகாசமாகத் தண்ணீரில் எரிந்த அற்புதம் அன்று நிகழ்ந்தது!

கருங்குழியில் தங்கியிருந்தபோது 1865&ஆம் ஆண்டு ராமலிங்கம் Ôசமரச வேத சன்மார்க்க சங்கம்Õ என்ற அமைப்பை உருவாக்கினார். பிற்காலத்தில் அந்தப் பெயரை Ôசமரச சுத்த சன்மார்க்க சத்தியச் சங்கம்Õ என்று மாற்றியமைத்தார். இந்தப் புதிய சங்கத்தின் கொள்கைகளாக அவர் அறிவித்தவை, மக்கள் பின்பற்றக்கூடிய மிக எளிய கொள்கைகள். அவை:

கடவுள் ஒருவரே.

கடவுளை உண்மையான அன்புடன், ஒளி வடிவில் வழிபட வேண்டும்.

சிறு தெய்வங்களின் பெயரால் உயிர்ப்பலி கொடுக்கக்கூடாது.

மாமிச உணவை உண்ணக்கூடாது.

ஜாதி, மத வேறுபாடு கூடாது.

பிற உயிர்களையும் தன்னுயிர் போல் கருத வேண்டும்.

பசித்த உயிர்களுக்கு உணவு அளித்து ஆதரிப்பதும் உயிர்க்கொலை செய்யாத பண்புமாகிய ஜீவகாருண்ய ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

ஜீவகாருண்ய ஒழுக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல்.

பசித்த உயிர்களுக்கு உணவளிப்பது எல்லாப் புண்ணியங் களுக்கும் மேலானது என்று உபதேசித்து வந்த ராமலிங்க அடிகள், அன்னதானச் சாலை ஒன்றை அமைக்க எண்ணம் கொண்டார்.

வள்ளலார் பிறந்த இடம்

கருங்குழிக்கு அருகிலுள்ள வடலூரில், பார்வதிபுரம் என்னும் கிராமத்து மக்களிடம் எண்பது காணி நிலத்தைத் தானமாகப் பெற்று, 1867|ஆம் ஆண்டு, மே மாதம் 23&ஆம் தேதியன்று அங்கு சமரச வேத தருமச்சாலையைத் தொடங்கினார். பின்பு, அதை அவரே Ôசமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச்சாலைÕ எனப் பெயர் மாற்றம் செய்தார்.

இந்தத் தருமச்சாலையில் மக்கள் வழங்கும் பொருள் உதவியைக் கொண்டு சாதி, மத, மொழி, இன, நிறப் பாகுபாடுகள் பாராமல் மூன்று வேளையும் பசித்தவர்க்கு உணவளிக்கும் தொண்டு இன்றும் தொடர்கிறது.

ராமலிங்க அடிகள் Ôவள்ளலார்Õ என அழைக்கப்படலானார். வேட்டவலம் ஜமீன்தாரான அருணாசல வசந்த கிருஷ்ண வாணாதிராய அப்பாசாமி பண்டாரியார் (கொஞ்சம் நீளமான பெயர்தான்!) என்பவருக்கு இரு மனைவியர்.

வள்ளலார் தண்ணீரால் விளக்கேற்றிய வீடு...

ஒருவரை நோயும் இன்னொருவரைப் பேயும் பிடித்துத் துயரப்படுத்தி வந்தன. பல்வேறு மருந்து, மந்திர பூஜைகளுக்குப் பிறகு கடைசியாக வள்ளலார் வேண்டி அழைக்கப்பட்டார்.

வேட்டவலம் ஜமீன்தார் இல்லத்தில் வள்ளலார் அடி வைத்ததும் பேய் விலகியது. அவர் தம் திருக்கரத்தால் மருந்து அளித்ததும் நோய் இறங்கியது. இதன்பிறகு, வேட்டவலம் அம்மன் கோயிலில், வள்ளலார் சொல்படி

உயிர்ப்பலி நிறுத்தப்பட்டு, பால் பொங்கலிட்டு வழிபாடுகள் நடத்தப்பட்டன.

வள்ளலாரின் புகழ் நாடெங்கும் பரவியது. அவரைச் சுற்றிக் கூட்டம் பெருகியது. தனிமையை விரும்பிய வள்ளலார், வடலூரிலிருந்து விலகி, அருகில் இருக்கும் மேட்டுக்குப்பம் சென்றார். அங்கு சில வருடங்களாக உபயோகப் படாமல் இருந்துவந்த ஒரு வைணவ மதத் திருக்கூடத்தில் தங்கினார். தாம் தங்கிய அந்த இடத்துக்கு Ôசித்தி வளாகத் திருமாளிகைÕ என்றுபெயர் சூட்டினார்.

தண்ணீரால் விளக்கேற்றிய இடம் இதுதான் (வீட்டின் உள்ளே)

அங்கேஅவர் அடிக்கடி பிரமதண்டிகா யோகம் செய்து வந்தார். இருபுறமும் இரும்புச் சட்டிகளில் நிலக்கரி கனன்று எரிய, நடுவில் அமர்ந்து தியானத்தில் இருப்பது பிரமதண்டிகா யோகம். அகச்சூடு நிறைந்த வள்ளலார், புறத்தே இவ்விதம் சூடேற்றித் தம் தேகத்தை அக்னிதேகமாக்கி வந்தார்.

இறைவனை ஒளி வடிவாகப் போற்றிய வள்ளலார், சத்திய தருமச்சாலைக்கு அருகில் ஓர் ஒளித் திருக்கோயிலை 1871-ஆம் வருடம் அமைக்கத் தொடங்கினார். சுமார் ஆறு மாதங்களில் கட்டி முடிக்கப்பட்ட அந்தத் திருக்கோயிலுக்குச் 'சமரச சுத்த சன்மார்க்க சத்தியஞான சபை' என்று பெயர் சூட்டினார்.

கல்பட்டு ஐயா திருச்சந்நிதி

25.1.1872, தை மாதம் 13|ஆம் நாள் தைப்பூசத் தினத்தன்று முதல் ஒளி வழிபாட்டு விழா நடைபெற்றது.

20.10.1873, செவ்வாய்க்கிழமை காலை எட்டு மணிக்கு சித்திவளாகத் திருமாளிகை முன் கொடியேற்றி வைத்து, கூடியிருந்தவர்களுக்கு நீண்ட அருளுரை வழங்கினார் வள்ளலார். அந்த அருளுரையே 'பேருபதேசம்' என்று சொல்லப்படுகிறது.

கொடியேற்றியதற்கு அடுத்த கார்த்திகை மாதம், திருவண்ணாமலை தீபத் திருநாளில், தமது அறையில் எப்போதும் எரிந்துவந்த தீப விளக்கைச் சித்திவளாகத் திருமாளிகையின் முன்புறம் எடுத்து வைத்தார்.

மக்களிடம் தீப விளக்கைத் தொடர்ந்து வழிபட்டு வரச் சொல்லிவிட்டு, Ôஆண்டவர் இப்போது தீப முன்னிலையில் விளங்குகிறபடியால், தெய்வ பாவனையை இந்தத் தீபத்தில் கண்டு ஆராதியுங்கள். நான் இப்போது இந்த உடம்பில் இருக்கிறேன். இனி எல்லா உடம்பிலும் புகுந்துகொள் வேண்Ö என்று செய்தி அளித்தார்.

1874-ஆம் வருடம் தை மாதம் 19|ஆம் நாள், புனர்பூசமும் பூசமும் கூடும் நன்னாளில் வள்ளலார் அனைவருக்கும் அருளாசி வழங்கினார். இரவு பன்னிரண்டு மணிக்குச் சித்திவளாகத் திருமாளிகைத் திருஅறைக்குள் புகுந்தார். அவரது விருப்பப்படி, அவரது பிரதம சீடர்களான கல்பட்டு ஐயாவும் தொழுவூர் வேலாயுதமும் மூடப்பட்ட அறையின் வெளிப்புறத்தைப் பூட்டினார்கள்.

கல்பட்டு ஐயா சந்நிதி & வெளிப்புறம்...

அன்று முதல் வள்ளலார் உருவமாக நமது கண்களுக்குத் தோன்றாமல், அருவமாக நிறைந்து, அருட்பெருஞ்ஜோதியாக விளங்கிக் கொண்டிருக்கிறார்.

சத்திய ஞானசபை

உலகில் வேறெங்கிலும் இல்லாத தனிப்பெரும் அமைப்பு இது. ஜாதி, மதம், இனம், மொழி, தேசம் என்ற வேறுபாடுகளைக் கடந்து, அனைவரும் வந்து பிரார்த்தனை செய்யத் தகுந்த இடம் இது. எண்கோண வடிவிலான இந்தக் கட்டடத்தை வள்ளலாரே வடிவமைத்தார்.

மையத்தில் நான்கு தூண்களைக் கொண்ட மண்டபமும் அதன்மீது பன்னிருகால் மண்டபமும், ஒன்றுக்குள் ஒன்றாக உள்ளன. நாற்கால் மண்டபத்தின் மையத்தில்தான் ஆண்டவர் ஜோதி வடிவில் இருக்கிறார்.

பன்னிருகால் மண்டபத்தில் ஒரு சுற்றுப் பிராகாரமும் பக்தர்கள் உட்கார்ந்து ஆண்டவனைத் தியானிக்க வழிபாட்டுக் கூடமும் இருக்கின்றன.

ஜோதி தரிசனம் ஆனதும் பக்தர்களுக்குத் திருநீறு பிரசாதமும் மலர்களும் கற்கண்டும் தரப்படுகின்றன.

சித்திவளாகம்

வடலூருக்கு அருகே மேட்டுக்குப்பத்தில் இருக்கிறது சித்திவளாகம். வள்ளலார்

ஏற்றிவைத்த அணையாதீபம் இங்கே வழிபாட்டில் இருக்கிறது. வள்ளலார் ஸித்திபெற்ற அறையின் பூட்டப்பட்ட கதவுக்கு வெளியே அமர்ந்து தியானம் செய்யலாம்.

தினமும் இங்கே திருவருட்பா பாடல்களை அன்பர்கள் பாடிப் பிரார்த்தனை செய்கின்றனர். மாதா மாதம் பூச நாட் களில் அன்னதானம், சிறப்புவழிபாடும் நடைபெறு கின்றன.

தைப்பூசத்துக்கு மூன்றாவது நாள் இந்த அறையை ஜன்னல் வழியாகப் பார்க்க அனுமதிக்கப்படுகிறது.

ஜோதி தரிசனம்

ஞானசபையில், 1872|ஆம் வருடம் ஜனவரி 25|ஆம் தேதி, தைப்பூச

ஜோதி தரிசனம்

நாளில் முதல் தடவையாக வழிபாடு தொடங்கப் பெற்று, ஜோதி தரிசனத்தை அனைவரும் கண்டுகளித்தனர். அது முதற்கொண்டு ஒவ்வொரு தைப்பூசத்திலும் முழுமையான தரிசனம் நடக்கிறது.

பௌர்ணமி முழு நிலவும் பூச நட்சத்திரமும் ஒன்றுசேரும் நாள்தான் தைப்பூச நாள். அந்த நாளில், நம் ஆன்ம சக்தியும் ஆழ்மனமும் உயர்நிலையை அடைகின்றன. அருட்பெருஞ்ஜோதி தரிசன அனுபவத்தை அந்த நாளில் பெறுவது உகந்ததாக இருக்கும் என்பதுதான் இந்த நாளை வள்ளலார் தேர்ந்தெடுக்கக் காரணம். தைப்பூச நாளில் காலை 6.30, 10.00, மதியம் 1.00, இரவு 7.00, 10.00, மறுநாள் அதிகாலை 5.30 மணி ஆகிய ஆறு காலங்களில் ஜோதி தரிசனம் நடைபெறுகிறது.

தவிர, இருபத்தேழு நாட்களுக்கு ஒருமுறை வரும் மாதாந்திர பூச நாளில், இரவு எட்டு மணி முதல் எட்டரை மணிவரை ஆறு திரைகளை விலக்கி, மூன்று முறை அருட்பெருஞ்ஜோதி தரிசனம் நடைபெறுகிறது.

தைப்பூச ஜோதி தரிசனம்

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் மனிதத்தன்மை என்ற ஒப்பற்ற ஜோதிப்

சித்திவளாகத்தில் உள்ள அணையா ஜோதி...

பிரகாசம் இருக்கிறது. ஆனால், ஆசை, கோபம், சுயநலம், பொய்மை போன்ற பொல்லாத குணங்கள் பல்வேறு திரைகளாகப் படர்ந்து, அந்த மனிதத் தன்மையை அமுக்கி மறைத்துவிடுகிறது.

இந்தப் பொல்லாத குணங்கள் விலகி, நல்ல நெறியை அடையும்போது, மனிதன் தனக்குள் இருக்கும் தெய்வத்தைத் தரிசிக்கிறான். ஜோதி தரிசனம் என்பதும் இதுபோலத்தான். ஏழு திரைகளை நீக்கிய பிறகுதான் ஜோதியைத் தரிசிக்க முடியும். கறுப்பு, நீலம், பச்சை, சிவப்பு, பொன்னிறம், வெண்மை, கலப்பு வண்ணம் என ஏழு வண்ணத் திரைகள்!

மாயா சக்தி, கிரியா சக்தி, பராசக்தி, இச்சா சக்தி, ஞான சக்தி, ஆதிசக்தி, சித்சக்தி என ஏழுவிதச் சக்திகளைக் கடந்துவிட்டால், ஜோதி வடிவிலான இறைவனைத் தரிசித்து, மரணமில்லாப் பெருவாழ்வை அடையலாம்.

ஞானசபையில் வழிபாடு தொடங்கியபோது, வள்ளலார் தன் கையால் ஒரு அகல்விளக்கை ஏற்றிவைத்தார். அது அணையாத்தீபமாக இன்றுவரை பராமரிக்கப்படுகிறது.

அந்தத் தீபம் ஆறேமுக்கால் அடி உயரமும் நாலேகால் அடி அகலமும் கொண்ட ஒரு கண்ணாடியில் பட்டு எதிரொலிப்பதே ஜோதி ஆகும். அந்தக் கண்ணாடி, வள்ளலாரால் நாற்பத்தெட்டு நாட்கள் விசேஷ வழிபாடு செய்யப்பட்டது.

எனவே, ஒவ்வொரு தைப்பூசத் திருநாளன்றும் சத்திய ஞானசபையில் இந்த ஏழு திரைகளையும் விலக்கி ஜோதி தரிசனம் நிகழும். இதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் காத்திருப்பார்கள். இறைதரிசனத்தோடு, தங்களையே தாங்கள் தரிசித்துக் கொள்ளும் உணர்வு இந்தச் சந்தர்ப்பத்தில் மக்களுக்குக் கிடைத்து வருகிறது.

ஜீவகாருண்ய ஒழுக்கம்!

வள்ளலார் அறிவுறுத்திய ஜீவகாருண்ய ஒழுக்கத்தின் முக்கியக் குறிக்கோள், பிற உயிர்களின் பசியை ஆற்றுவது.

சத்திய தருமச்சாலை & வெளித்தோற்றம்

"ஜீவகாருண்ய ஒழுக்கமானது, மனிதருக்கு முக்தியை அருளும்" என்றார் அவர். ஜீவகாருண்ய வழியைக் கடைப்பிடிப்பது மிக எளிது.

"பசி என்பது என்ன? உயிர்களுக்குப் பசி என்னும் ஒன்று எதனால் இருக்கிறது? பசியின் காரணமாக, மனிதர்கள் என்னென்ன கொடுமைகளைச் செய்யத் துணிவார்கள்? பசியினால் ஓர் உயிருக்கு உண்டாகும் வேதனைகள் என்னென்ன?" என்று வள்ளலார் ஜீவகாருண்ய ஒழுக்கத்தை வலியுறுத்த, பசியைப் பற்றி அணுஅணுவாக அலசி ஆராய்ந்திருக்கிறார். பசியைப் பற்றிய அவரது கருத்துகள் இங்கே:

பசி என்ற ஒன்று இருப்பதேன்?

பசியில்லாவிட்டால் உணவுக்காக மக்கள் ஒருவரை ஒருவர் எதிர்பார்க்க மாட்டார்கள். அப்படியில்லாதபோது, ஒருவருக்கொருவர் உதவமாட்டார்கள். அப்படி உதவவில்லை என்றால், மனிதநேயம் இல்லாமல் போய்விடும்.

சத்திய ஞான சபை & வெளித்தோற்றம்

மனிதநேயம் இல்லாவிட்டால், கடவுள் அருள் கிட்டாது. எனவே, கடவுளை அறிய, கடவுளால் நமக்குக் கொடுக்கப்பட்ட ஓர் உதவிக் கருவிதான் பசி! பசி என்பது என்ன?

பசி என்பது, ஏழைகளின் உடலில் பற்றி எரியும் நெருப்பு.

பசி என்பது, ஏழைகளின் அறிவாகிய விளக்கை அணைக்க முயலும் விஷக்காற்று.

பசி என்பது, ஏழைகளின்மேல் பாய்ந்து கொல்லப் பார்க்கும் புலி.

பசி என்பது, உச்சி முதல் பாதம் வரை பாய்ந்து பரவும் விஷம்.

பசி நோயினால் ஏற்படும் கொடுமைகள்!

பசி நோய் என்பது மிகவும் பயங்கரமானது. அந்நோயைத் தீர்த்துக்கொள்ள, மக்கள் எத்தகைய பாவத்தையும் செய்ய அஞ்சமாட்டார்கள்.

பெற்றவர்கள், பிள்ளைகளை விற்பார்கள்.

இதன் விளைவாகப் பிள்ளைகள் அநாதைகளாகத் திரிவார்கள். பிச்சை எடுப்பார்கள். கடின வேலைகளில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

பிள்ளைகள், பெற்றவர்களை விற்பார்கள்.

வள்ளலார் சந்நிதி

இதன் விளைவாக, வயதானவர்கள் பரதேசங்களில், பரவீடுகளில் கடின உழைப்பில் ஈடுபட வேண்டியிருக்கும். பிச்சை எடுக்க நேரிடும். முதியோர் இல்லங்களில் தஞ்சம் புகுந்து, கூனிக் குறுக நேரிடும்.

வீடு, மாடு, நிலம், மற்ற உடைமைகள் அனைத்தையும் விற்று, மக்கள் பசிப்பிணியை அகற்றப் பார்ப்பார்கள்.

முனிவர்களையும் யோகிகளையும் சித்தர்களையும்கூடப் பசி தாக்கும். அச்சமயங்களில் அவர்கள் பிச்சை கேட்டு ஊருக்குள் நுழைவார்கள். பிச்சை கிடைக்காவிடில் சித்தம் கலங்குவார்கள்.

எந்நேரமும் காமத்தை விரும்பும் காமுகர்கள்கூடப் பசிப்பிணி தாக்கும்போது, காமம் மறந்து கலங்கு வார்கள்.

பசிப்பிணி தாக்கினால் என்னாகும்?

அறிவு மயங்கும்.

கடவுளைப் பற்றிய நினைப்பு அடியோடு ஒழிந்து போகும்.

சித்தம் கலங்கும்.

நம்பிக்கை குலையும்.

கண் பஞ்சடைந்து குழிந்துபோகும்.

காதில் இரைச்சல் ஏற்படும்.

நாக்கு உலர்ந்துபோகும்.

கை, கால் சோர்ந்து துவளும்.

வார்த்தை குழறும்.

வயிறு திகுதிகுவென எரியும்.

தாபமும் கோபமும் பெருகும்.

உயிர் விலகுவதற்கான அத்தனை அறிகுறிகளும் மேலும் மேலும் தோன்றும்.

நரக வேதனை, ஜனன வேதனை, மரண வேதனை ஆகிய வேதனைகளும் ஒன்றுதிரண்டால் என்ன வேதனை உண்டாகுமோ, அதுவே பசி வேதனை.

பசி அகன்றால் அடையும் ஆனந்தங்கள்!

உணவு கிடைத்து, உண்டு பசியாறியவுடன், பசியால் நேர்ந்த அத்தனை துன்பங்களும் அகலும்.

தத்துவங்கள் மறுபடி தழைக்கும்.

உள்ளம் குளிரும்.

சித்தம் தெளியும். உள்ளேயும் வெளியேயும் உயிர்க்களை உண்டாகும்.

கடவுள் நம்பிக்கை துளிர்க்கும்.

உள்ளே... ஐம்பொன்னாலான திருவுருவம்

தாய், தந்தை, மனைவி, குழந்தைகள், நிலம், பொன், மணி ஆகியவற்றைக் காணும்போது கொள்ளும் மகிழ்ச்சியைவிட, பசியால் வேதனைப்படுபவர்கள் உணவைக் காணும்போது அதிக மகிழ்ச்சி அடைவார்கள். உணவைக் கண்டவுடனேயே அவ்வளவு மகிழ்ச்சி ஏற்படும் என்றால், அதை உட்கொண்டபின் அடையும் ஆனந்தம் எப்படிப்பட்டதாக இருக்கும்? ஆதலால், உணவைக் கடவுளுக்குச் சமமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பிற உயிர்களின் பசியாற்றி, ஒப்பில்லா திருப்தி இன்பத்தை அளிப்பவர்கள் புண்ணியர்கள். இந்தப் புண்ணியத்துக்கு எந்தப் புண்ணியத்தை இணையென்று சொல்ல முடியும்?

இந்தப் புண்ணியத்தைச் செய்கிற புண்ணியர்களை, எந்தத் தெய்வத்துக்கு ஈடாகச் சொல்வது?

இவர்களை, எல்லாத் தெய்வங்களுக்கும் மேலாகிய கடவுளின் அம்சமென்றே

சத்தியமாக அறியவேண்டும்.

ஜீவகாருண்யம் கடைப்பிடிப்பதால் வரும் நன்மை!

சூலைநோய், குஷ்டநோய் போன்ற தீராத வியாதிகளால் அவதிப்படும் இல்லறவாசிகள், அந்நோய்களிலிருந்து விடுபடுவார்கள் என்பது சத்தியம்.

பல நாட்கள் குழந்தை பாக்கியம் இல்லாமல் மனவருத்தம் கொண்டவர் களுக்கு, குழந்தை பாக்கியம் உண்டாகும்.

தனக்கு அற்ப ஆயுள் என்றுஜோதிடம் மூலமாகவோ, மருத்துவம் மூலமாகவோ அறிந்து, மரணத்துக்குப் பயந்து கலங்கு கிறவர்களுக்கு ஜீவகாருண்ய ஒழுக்கம் நீண்ட ஆயுளைக் கொடுக்கும்.

கல்வி, அறிவு, செல்வம், போகம் ஆகியவற்றில் குறை உள்ளவர்கள், பசித்த ஏழைகளின் பசியாற்றினால் கல்வி, அறிவு, செல்வம் மற்றும் மகிழ்ச்சியை அளிக்கவல்ல போகங்கள் அனைத்தும் கிட்டும்.

வள்ளலார் ஸித்தி அடைந்த வளாகம்...

பசித்தவர்களுக்குப் பசியாற்றுவதை விரதமாகக் கொண்ட மக்களுக்குக் கோடையில் வெயில் வருத்தாது. மண்ணும் சூடு செய்யாது. பெருமழை, பெருநெருப்பு, பெருங்காற்று ஆகியவற்றால் துன்பம் உண்டாகாது.

கள்வர்களாலும் விரோதிகளாலும் துன்புறுத்தப்பட மாட்டார்கள்.

அரசாங்கத்தால் அவமதிக்கப்பட மாட்டார்கள். சிறைவாசம் போன்ற கொடுமைகள் நேரிடாது.

வயல்களில் முயற்சி இன்றியே விளைச்சல் பெருகும்.

வியாபாரத்தில் தடையின்றி லாபம் கிடைக்கும்.

கனவில் சென்று கட்டளையிட்ட பெருமான்!

ஒரு சமயம் தருமச்சாலையில், மறுநாள் அன்னதானத் துக்குத் தேவையான அரிசி இல்லை என்ற நிலை. செய்தியைப் பணியாளர்கள், வள்ளலாரிடம் தயக்கத்துடன் கூறினர்.

வள்ளலார் தனியாக ஓரிடத்தில் அமர்ந்து சற்று நேரம் தியானம் செய்தார். தியானம் முடிந்தபின், Ôஅரிசி யும் மற்றவையும் நாளைக்கு வரும்Õ என்று கூறினார்.

இந்த ஜன்னலை தைப்பூசம் அன்று திறப்பார்கள்...

மறுநாள் பொழுது புலர்ந்து கொண்டிருக்கும்போதே திருத்துறையூரில் இருந்து மூன்று வண்டிகளில் அரிசியும் பிற உணவுப் பொருட்களும் தருமச்சாலைக்கு வந்து சேர்ந்தன.

அவற்றைக் கொண்டு வந்தவர் வள்ளலாரிடம் அன்பு பூண்ட அன்பர் ஒருவர். முதல் நாளிரவு கனவில், வள்ளலார் வந்து அரிசியையும் மற்றவற்றையும் கொண்டு வந்து தருமாறு கூறியதாகவும், அதை உத்தரவாக எண்ணி உடனே வண்டி கட்டிக்கொண்டு கிளம்பி வந்ததாகவும் அந்த அன்பர் தெரிவித்தார்.

உடல் வேறு உயிர் வேறு!

வள்ளலார் தருமச்சாலையின் வெளியே உச்சிப்பொழுதில் வெயிலில் அமர்ந்து தியானத் தில் மூழ்கி இருப்பார். அந்தச் சமயங்களில் வள்ளலாரின் தலைக்கும் சூரியனுக்கும் இடையே ஓர் அக்னிக் கம்பம் இருப்பது போல் தோன்றும்.

இது அனைவருக்கும் பழக்கப்பட்ட காட்சியாக இருந்திருக்கிறது. இதைவிட இன்னொரு காட்சிதான் வள்ளலாரை வெறும் துறவியாக மட்டுமின்றி மாபெரும் சித்தராக உலகுக்கு அறிமுகப்படுத்தி இருக்கிறது.

ஒருநாள் உச்சிவேளையில் தருமச்சாலையில் இருந்து வள்ளலார் வெளியே புறப்பட்டுச் சென்றார். வெகுநேரம் ஆகியும் அவர் திரும்பி வராததால், கவலைப்பட்ட சண்முகம் பிள்ளை என்னும் அன்பர் வெளியே வந்து தேடினார்.

ஓரிடத்தில் வள்ளலாரின் கை, கால் என்று அனைத்து அங்கங்களும் வெவ்வேறாகிக் கிடப்பதைக் கண்டு பயந்து பதறி மயங்கி விழுந்தார் அவர்.

உடனே வள்ளலாரின் அங்கங்கள் எல்லாம் ஒன்றாகி, சண்முகம் பிள்ளையை எழுப்பி, "இனி இப்படி என்னைத் தேட வர வேண்டாம்!" என்று கூறி அவருடன் தருமச்சாலைக்குத் திரும்பினார்.

பெய்யெனப் பெய்த மழை!

கோடைகாலத்தில் தருமச்சாலைக்கு வந்தவர்களில் பலர் மழையில்லாத காரணத்தால் பயிர்கள் எல்லாம் வாடுகின்றன என்றும் கால்நடைகளும், மக்களும் பல துன்பங்களுக்கு ஆளாகி இருக்கிறார்கள் என்றும் வள்ளலாரிடம் முறையிட்டனர்.

இந்தக் கதவு வழியே சென்று உள்ளே ஸித்தியடைந்தார்...

ஒரு செம்பு நீரைத் தனது காலில் ஊற்றும்படி கூறினார் வள்ளலார். அன்பர்களும் அவ்வாறே செய்தனர்.

என்ன ஆச்சரியம்! சற்று நேரத்தில் மேகங்கள் திரண்டு நான்கு அங்குல அளவுக்கு மழை பெய்தது.

அது கேட்டு புதுப்பேட்டை என்னும் ஊரில் உள்ள அன்பர்கள் வடலூருக்கு வந்து தங்கள் ஊரிலும் மழை இல்லாதது சொல்லி வள்ளலாரை அழைத்தார்கள்.

வள்ளலார் அங்கு சென்று ஆறு குடம் தண்ணீரைத் தன் தலையில் ஊற்றுமாறு கட்டளையிட்டார். ஊர் மக்களும் அவர் சொல்படி செய்தனர். அவ்வளவுதான்!

புதுப்பேட்டை கிராமத்தில் தண்ணீர் பொங்கியது. ஆறு, கிணறுகளில் நீர் நன்கு ஊறிப் பெருகியது. நீரின் சுவையும் கூடியது. ஊரில் நல்ல மழையும் பொழிந்து செழித்தது.

வள்ளலார் வரவழைத்த தீஞ்சுவை நீரோடை

சித்திவளாகத் திருமாளிகைக்குக் கிழக்குத் திசையில் சற்றுத் தூரத்தில் மரம், செடி, கொடிகளுக்கு இடையே ஒரு நீரோடை இருக்கிறது. வள்ளலாரைக் காணவருபவர்கள் அந்த ஓடையில் நீராடுவது வழக்கம். நீரோடையில் ஒரு முறை நீர் வற்றிவிட்டது. வள்ளலார் அங்கு சென்றார். தமது கரத்தால் நீரோடையைத் தொட, நீர் பொங்கி எழுந்து நிறைந்தது.

அது முதல் அந்த நீரோடை ‘தீஞ்சுவை நீரோடை’ என அழைக்கப்படுகிறது. கோடைகாலத்திலும் நீர் வற்றுவதில்லை. அது மட்டுமல்ல, இந்த ஓடையில் குளித்தாலும், அதன் நீரைப் பருகினாலும் நோய்கள் நீங்குகின்றன.

வள்ளலார் கரம்பட்ட தும் சாதாரண நீரோடை, சக்தி வாய்ந்த நீரோடை ஆகிவிட்டது.

பாடல்களில் வாழ்கிறார்!

வள்ளலார் உருவாக்கிய தீஞ்சுவை ஊற்று...

வள்ளலார் தமது வாழ்வின் நிகழ்வுகள் அத்தனையையும் பாடல் களாகப் பாடி இருக்கிறார்.

ஒரு சமயம் இறைவன் தன் துணைவியுடன் இரட்டைக் குதிரை பூட்டிய வண்டியில் வள்ளலார் இருக்குமிடத்துக்கு வந்து அருள் புரிந்ததையும், அப்போது தன்னைத் தேடிவந்தவர் யாரோ, எவரோ எனப் புரியாமல் வாசலருகிலேயே கதவின் தாழ்ப்பாளைப் பற்றிக்கொண்டு பயத்துடன் நின்று பார்த்ததையும் வள்ளலார் பாடல் வடிவில் கூறியுள்ளார். அந்தப் பாடல்;

எருதின் உழைத் திருந்தேனுக் கிரங்கிஅடிச் சிறியேன்
இருந்தஇடந் தனைத்தேடி இணைப்பரிமான் ஈர்க்கும்
ஒருதிருத்தேர் ஊர்ந்தென்னை உடையவளோ டடைந்தே
உள்வாயில் தாழ்பிடித்துப் பயத்தொடுநின் றேனை
வருதிஎனத் திருக்கரங்கள் அசைத்தழைத்த பதியே
மணியே என் மருந்தேஎன் வாழ்வேஎன் வரமே
சுருதிமுடி அடிக்கணிந்த துரையேஎன் உளத்தே
சுத்தநடம் புரிகின்ற சித்தசிகா மணியே.

இதே போல அவர் இறுதியாக சித்திவளாகத்தில் இருந்த போது இறைவன் அவரை ஆட்கொண்டதையும் பாடலாகப் பாடியிருக்கிறார். அந்தப் பாடல்:

வானிருக்கும் பிரமர்களும் நாரணரும் பிறரும்
மாதவம்பன் னாட்புரிந்து மணிமாட நடுவே
தேனிருக்கும் மலரணைமேல் பளிக்கறையினூடே
திருவடிசேர்த் தருள்எனச் செப்பிவருந் திடவும்
நானிருக்கும் குடிசையிலே வலிந்துநுழைந் தெனக்கே
நல்லதிரு அருளமுதம் நல்கியதன் றியும்என்
ஊனிருக்கும் குடிசையிலும் உவந்துநுழைந் தடியேன்
உள்ளமெனும் சிறுகுடிசை யுள்ளும்நுழைந் தனையே.

ஒரு கேள்வியும் வள்ளலாரின் பதிலும்!

கேள்வி: மரம், புல், நெல் முதலான தாவரங்களும் உயிராகவே சொல்லப்படுகின்றனவே... அவற்றை இம்சை செய்து ஆகாரமாக உட்கொண்டால், உயிர்க்கொலை செய்து உண்பது போல்தானே ஆகும்?

வள்ளலாரின் பதில்: மரம், புல், நெல் முதலான தாவரங்களும் உயிர்கள்தான். ஆனால், அவ்வுயிர்கள் தோன்றும் வித்துகள் வெறும் சடங்களே.

அவ்வித்துகளை நாமே விதைத்து, உயிர் விளைவு செய்ய முடியும். அப்படி நாமே விளைவு செய்த அந்த உயிர்களைக் கொல்லாமல், அந்தத் தாவரங்களில் உயிரின்றி, உயிர் தோன்றுவதற்குத் தகுதியுள்ள சடங்களான வித்துகளையும் காய்களையும் கனிகளையும் பூக்களையும் கிழங்குகளையும் தழைகளையுமே ஆகாரமாகக் கொள்கிறோம். தாவரங்களை வேருடன் பிடுங்கி ஆகாரமாகக் கொள்வதில்லை.

வளர்ந்த தாவரங்களின் விதைகள், காய், கனிகள் முதலானவற்றைப் பறிக்கும்போது, மனிதர்களின் நகம், ரோமம் ஆகியவற்றை அகற்றும்போதும் துன்பம் உண்டாகாதது போல் தாவரங்களுக்கும் துன்பம் உண்டாவதில்லை.

மேலும், தாவர வர்க்கங்களுக்கு மனம் முதலியன வளராததால், அது உயிர்க்கொலையும் அல்ல; துன்பம் உண்டுபண்ணுவதும் அல்ல. எனவே, இது ஜீவகாருண்ய விரோதமாகாது.

சித்த மருத்துவர் வள்ளலார்!

பல மூலிகைகளின் குணங்களை அட்டவணையாக எழுதியிருக்கிறார். சஞ்சீவி மூலிகைகள் பலவற்றைப் பற்றிய குறிப்புகளை எழுதியிருக்கிறார். சஞ்சீவி மூலிகைகளின் துணைகொண்டு இறந்தவர்களை மறுபடி உயிர்ப்பிப்பது எப்படி என்று எழுதியிருக்கிறார். அங்கங்கள் துண்டுகளாக வெட்டுப்பட்டால், அவற்றை மீண்டும் இணைக்க எந்த மூலிகையை உபயோகிக்க வேண்டும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

வலுவான, திடமான சரீரத்துக்கு அவர் கூறும் மருத்துவக் குறிப்பு இதோ:

கெட்டி மிளகு அரைகிலோ எடுத்துக்கொண்டு, அதைப் பேயன்வாழையின் கிழங்குச் சாற்றில் மூன்று நாள் ஊறவைக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் இரவில் ஊறவைத்துப் பகலில் நிழலில் காயவைக்க வேண்டும்.

வள்ளலார் நினைவிடம் மருதூர்...

இந்த முறையைப் பின்பற்றி, வாழைக் கிழங்கின் சாறில் ஊறவைத்து, நிழலில் காயவைத்த மிளகை, அதன்பின் இளநீரில் மூன்று நாள், கரிசலாங்கண்ணிக் கீரைச் சாற்றில் மூன்று நாள், பொன்னாங்கண்ணி கீரைச் சாற்றில் மூன்று நாள், பசுங்கோமயத்தில் மூன்று நாள், பசும்பாலில் மூன்று நாள் எனத் தனித்தனியாக இரவில் ஊறவைத்து, பகலில் நிழலில் காயவைத்து, தேய்த்துப் புடைத்து எடுத்து வைத்துக்கொண்டு, தினம் காலையில் ஐந்து மிளகுகளை உட்கொண்டால் வலுவான, திடமான சரீரம் அமையும்.

வள்ளலார் வகுத்த தினப்படி வாழ்க்கைமுறை

1. சூரியோதயத்துக்கு முன்னால் தூக்கம் நீங்கி எழுந்து கொள்ள வேண்டும். சிறிது நேரம் அமர்ந்து, கடவுளைத் தியானம் செய்யவேண்டும்.

2. இயற்கைக் கடன்களைக் கழித்தபின் செவிகள், கண்கள், நாசி, வாய், தொப்புள் இவற்றில் அழுக்கு, பீளை, சளி, ஊத்தை என்கிற அசுத்தங்களையும் கை, கால் முதலிய உறுப்புகளில் உள்ள அழுக்குகளையும் வெந்நீரால் தேய்த்துச் சுத்தமாகக் கழுவ வேண்டும். பின் வேலங்குச்சி, ஆலம் விழுது கொண்டு பல் தேய்த்து, அதன்பின் கரிசலாங்கண்ணி கீரைத் தூள் கொண்டு, உள்ளே சிறிது சாறு போகும்படி பல்தேய்த்து வாய் கழுவ வேண்டும்.

3.அதன்பின் கரிசலாங்கண்ணி இலை ஒரு பங்கு, தூதுவளை, முசுமுசுக்கையி

3.அதன்பின் கரிசலாங்கண்ணி இலை ஒரு பங்கு, தூதுவளை, முசுமுசுக்கையிலை சேர்ந்த கலவை கால்பங்கு, சீரகம் கால்பங்கு இவற்றை ஒன்றாகச் சேர்த்துப் பொடி யாகத் தயாரித்து வைத்துக்கொண்டு, அந்தப் பொடியில் ஒரு கிராம் எடுத்துத் தண்ணீரில் சேர்த்துக் கொதிக்கவைக்க வேண்டும். ஒரு டம்ளர் அளவு தண்ணீரைக் கொதிக்க வைக்கலாம்.

அத்துடன் ஒரு டம்ளர் பாலையும் சேர்த்துக் கொதிக்க வைத்து, இரண்டு டம்ளர் திரவம், ஒரு டம்ளராகச் சுண்டியபின், அதில் நாட்டுச் சர்க்கரை கலந்து சாப்பிட வேண்டும்.

4. காலை வெயில் உடல்மேல் படாதவண்ணம் மேற்சட்டை அணியவேண்டும்.

5. ஒன்றரை மணி நேரம் கழித்து, வெயிலில் மிதமான உடற்பயிற்சிகள் செய்யவேண்டும். பின், இளம் வெந்நீரில் குளிக்க வேண்டும். சற்று நேரம் கடவுளை வணங்க வேண்டும்.

6. பசி எடுத்தவுடன் சாப்பிட வேண்டும். சாப்பிடும் போது அள்ளிப் போட்டுக் கொள்ளக்கூடாது. மிக நிதானமாகவும் (சோம்பேறித்தனத்துடன்) உண்ணக்கூடாது. சாப்பிட்டபின் ஒரு டம்ளர் வெந்நீர் அருந்த வேண்டும்.

7. கிழங்கு வகைகளை உண்ணக்கூடாது. ஆனால், கருணைக்கிழங்கை உண்ணலாம். பேயன் வாழைப்பழம், ரஸ்தாளி வாழைப்பழம் ஆகியவற்றை உட்கொள்ளலாம். பதார்த்தங்களில் புளி, மிளகாய் ஆகியவற்றைக் குறைவாகவும் மிளகு, சீரகம் ஆகியவற்றை அதிகமாகவும் சேர்க்க வேண்டும். கடுகு சேர்ப்பது அவசியமல்ல. உப்பைக் குறைவாகச் சேர்த்துக்கொள்வது உடல்நலத்துக்கு நல்லது. தாளிப்பதற்கு நல்ல எண்ணெய் உபயோகிக்கலாம்.

அல்லது பசு வெண்ணெயால் தாளிக்கலாம்.

8. கத்தரிக்காய், வாழைக்காய், அவரைக்காய், முருங்கைக்காய், பீர்க்கங்காய், பூசணிக்காய், புடலங்காய், கொத்தவரைக்காய் இவற்றை கறி செய்வதற்கு உபயோகப்படுத்தலாம். முருங்கை, கத்தரி, பேயன் வாழைக்காய் ஆகியவற்றை அடுத்தடுத்து கறி செய்யலாம். மற்றவற்றை எப்போதாவது பயன்படுத்த வேண்டும்.

9. சர்க்கரைப் பொங்கல், புளியோதரை, தயிர்சாதம் போன்ற சித்திரான்னங்களை அடிக்கடி சாப்பிடக்கூடாது. எப்போதாவது சாப்பிடலாம்.

10. புளித்த தயிர் சேர்த்துக் கொள்ளலாம்.

11. பருப்பு வகைகளில் துவரம்பருப்பை அடிக்கடி சேர்த்துக்கொள்ளலாம். மற்ற பருப்பு வகைகளை எப்போதாவது சேர்த்துக் கொள்ளலாம்.

12. விருந்து உணவு என்றாலும், சற்றுக் குறைவாகவே புசிக்க வேண்டும்.

13. வெந்நீரையே குடிக்கவேண்டும்.

14. மாலை வெயில் உடலில் படுமாறு சற்று உலாவ வேண்டும். காற்று அதிகமாக இருந்தால் உலாவக் கூடாது. கடும் வெயில், பனி, மழை இவை தேகத்தில் படுமாறு உலவக்கூடாது.

15. இரவின் தொடக்கத்தில் முகம், கை, கால் ஆகியவற்றைக் கழுவிச் சுத்தம் செய்துகொள்ள வேண்டும். பின் தியானம் செய்யலாம். மந்திரங்கள் சொல்லிக் கடவுளை வணங்கலாம். புத்தகங்களைப் படிக்கலாம். வீட்டு விவகாரங்களைப் பற்றிப் பேசலாம்.

16. பிறகு இரவு உணவு. பகல் உட்கொண்டதில் அரைப்பங்கு அளவே இரவு உண்ண வேண்டும்.

17. இரவில் கீரை, தயிர் மற்றும் உடலுக்குக் குளிர்ச்சி தரும் உணவு வகைகளைச் சேர்க்கக்கூடாது. இரவில் சூடான பதார்த்தங்களையே உண்ண வேண்டும்.

18. இரவுச் சாப்பாடு முடிந்து இரண்டு மணி நேரத்துக்குப் பின் பசும்பாலைக் காய்ச்சிக் குடிக்க வேண்டும்.

19. பெண்களுடன் உறவு கொள்ளும் நாட்களில், உறவு செய்வதற்கு அரைமணி நேரம் முன்னிருந்து உடலுறவைப் பற்றி எண்ணாமல், அதன்பின் உறவு கொள்ளவேண்டும். ஒருமுறைக்கு மேல் உடலுறவு வைத்துக் கொள்ளக்கூடாது |

ஒரே இரவில்.

20. உடலுறவு முடிந்தபின் உடலைத் தூய்மைப்படுத்திக் கொண்டு கடவுளைத் தியானம் செய்து, பின் உறங்க வேண்டும். நான்கு நாட்களுக்கு ஒருமுறை உடலுறவு வைத்துக்கொள்வது அதமம். எட்டு தினங்களுக்கு ஒருமுறை என்றால் மத்திமம். பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை என்றால் உத்தமம்.

21. படுக்கும்போது இடதுகைப் பக்கமாகவே உறங்க வேண்டும். அதிகபட்சம் நான்கு மணி நேரத்துக்குமேல் உறங்கக்கூடாது.

22. கொலை, கோபம், சோம்பல், பொய், பொறாமை, கடுஞ்சொல் போன்றவை கூடாது.

23. உரத்துப் பேசுதல், வேகமாக நடத்தல், ஓடி நடத்தல், வழக்குப் போடுதல், சண்டையிடுதல் போன்றவை கூடாது.

24. பதற்றம் மிகுந்தால் பிராணவாயு அதிகமாகச் செலவாகும். எனவே, பதற்றம் கூடாது.

25. நான்கு நாட்களுக்கு ஒருமுறை நல்லெண்ணெயைத் தலையில் தேய்த்துக்கொண்டு, வெந்நீரில் குளிக்க வேண்டும். அல்லது, வாரத்துக்கு ஒருமுறையாவது காய்ச்சிய நல்லெண்ணெயைத் தலையில் தேய்த்துக்கொண்டு முழுக வேண்டும்.

26. புகை, கஞ்சா, கள், சாராயம் போன்றவை கூடாது.

27. மூன்று மாதத்துக்கு ஒருமுறை அல்லது ஆறு வாரத்துக்கு ஒருமுறை பேதிக்கான மருந்தை உட்கொள்ள வேண்டும்.

வள்ளலார் வழங்கியுள்ள பிரார்த்தனை

ஒருவன் பிரார்த்தனை செய்யும்போது அவனுக்காக மட்டும் செய்வது சரியல்ல. இந்த உலகமெல்லாம் வாழும்படி பிரார்த்தனை செய்தல் வேண்டும். அப்படிச் செய்வதால், அதில் தனி ஒரு மனிதருக்கு வேண்டியவை எல்லாம் அடங்கிவிடுகின்றன. மனிதர்கள் செய்யவேண்டிய கடவுள் பிரார்த்தனை இதுதான்:

"பாதி இரவில் எழுந்தருளிப் பாவியேனை எழுப்பி அருட்
ஜோதி அளித்தென் உள்ளகத்தே சூழ்ந்து கலந்து துலங்குகின்றாய்.
நீதி நடஞ்செய் பேரின்ப நிதி நான் பெற்ற நெடும் பேற்றை
ஓதி முடியாது என்போல் இவ்வுலகம் பெறுதல் வேண்டுவனே..."

பொன்னான மண்!

பத்தென்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில், சென்னையில் ஒரு பெரும் பணக்காரர் செம்பைத் தங்கமாக்கும் வித்தையைக் கற்க முற்பட்டு. அம்முயற்சியில் தமது பெருஞ்செல்வம் அனைத்தையும் இழந்தார்.

ஒரு நாள் அவருடைய வீட்டைக் கடந்து ராமலிங்க அடிகளார். சென்றார். அவரைக் கண்ட அந்த நபர் ஓடோடிச் சென்று, அவர்தம் கால்களில் விழுந்து, தாம் ஏழையான கதையையெல்லாம் சொல்லிச் சொல்லி அழுதார். தமக்கு எப்படியாவது ரசவாத வித்தையைக் கற்றுக் கொடுக்குமாறு கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். வள்ளலார் ஒரு கண்ணாடி தம்ளரில் நிறைய தண்ணீர் கொண்டுவருமாறு கேட்டார். தம்ளரில் தண்ணீர் வந்ததும், அந்தத் தண்ணீரில் கொஞ்சம் தெரு மணலை எடுத்துப்போட்டார். அந்த மணல் தண்ணீருக்குள் விழுந்தது. தம்ளரின் அடியில் சேரும்போது பொன்னாக மாறியிருந்தது. அந்த வித்தை இவ்வளவு எளிதாக இருப்பதைக் கண்ட மாஜி செல்வந்தர், அந்த வித்தையைத் தனக்குக் கற்றுத்தருமாறு கேட்டுக்கொண்டார்.

வள்ளலார் சொன்னார்: இந்த ரசவாத வித்தை மிக மிகச் சுலபம்தான். ஆனால் ஒன்றே ஒன்று, பொன்னாசை அறவே அற்றவர்களுக்கு மட்டுமே இந்த வித்தை பலிக்கும்!

ஆக்கம்:கவியோகி வேதம்
நன்றி: விகடன்.

* நீங்கள் இதுவரையில் சாப்பிடாத ஒரு உணவு பதார்த்தம் உங்கள் முன் இருக்கிறது. அதன் ருசியை அனுபவிக்க வேண்டும், எப்படியாவது அதை சாப்பிட்டுவிட வேண்டும் என்ற ஆசை உங்கள் உள்மனதிற்குள் எழும்புகிறது. இது இயல்பு. அந்த பதார்த்தத்தை நீங்கள் வாயில் போட்டு உண்ணும் வரையில் அதன் ருசி உங்களுக்குத் தெரியாது. அதுவரையில் அதன் மீதிருக்கும் ஆசை கூடிக்கொண்டு போகுமே தவிர சற்றும் குறையாது. அதேபோல் இறைவனும் நமக்கு பிடித்தமானவராகவே இருக்கிறார். அவரை வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பதால் மட்டும் நாம் அவரை அடைந்துவிட முடியாது. அவரை நாம் மனதிற்குள் வைத்து, அனுபவித்து மகிழ்ந்தால்தான் இது சாத்தியமாகும். எனவே, இறைவனை அடையவேண்டும் என்ற ஒரு உத்வேகத்துடன் செயல்படுங்கள். அவர் மீது வைத்திருக்கும் ஆசையை மட்டும் விட்டுவிடாதீர்கள்.

* இறைவன் உருவமாக இல்லாமல், ஒளி வடிவில்தான் அருள் செய்கிறான். மேல் உலகம், கீழ் உலகம், அளவிடமுடியாத அண்டம் என மூன்று உலகத்திலும் நிறைந்திருக்கும் அவன் அசைந்தாடுகின்ற

ஒளியாகிய ஜோதியில் ஐக்கியமாகி இருக்கிறான். இந்த உண்மையை தெரிந்துகொண்டு அந்த ஜோதியையே பரம பிதாவாக எண்ணி வழிபடுங்கள். தன்னை ஜோதி வடிவினனாக வழிபடுவதைத்தான் இறைவனும் விரும்புகிறான்.
— வள்ளலார்

தைப்பூசம்வள்ளலார் சித்தியடைந்த நாள்

கடலூர் அருகிலுள்ள திருமருதூர் கிராமத்தில் வசித்த ராமையா பிள்ளையின் ஆறாவது மனைவி சின்னம்மை. தனது முந்தைய ஐந்து மனைவிகளும் தொடர்ந்து இறந்ததால் ஆறாவதாக சின்னம்மையை மணம் முடித்திருந்தார். இவர்களுக்கு சபாபதி, பரசுராமன், சுந்தரம்மாள், உண்ணாமலை என்ற நான்கு பிள்ளைகள் பிறந்தனர்.

ராமையா பிள்ளையும், சின்னம்மையும் சிறந்த சிவபக்தர்கள். தினமும் வீட்டிற்கு ஒரு சிவனடியாரை அழைத்து வந்து அவருக்கு அன்னதானம் செய்வதை வழக்கமாக கொண்டிருந்தனர். ஒருநாள் மதியவேளையில் சிவனடியார் ஒருவர் புலித்தோல் உடுத்தி ராமையா பிள்ளையின் வீட்டிற்கு வந்தார். அப்போது ராமையாபிள்ளை வெளியில் சென்றிருந்தார். சின்னம்மையார், அவரை வீட்டிற்குள் அழைத்து வந்து, விருந்து படைத்தார். வயிறும், மனமும் நிரம்பப் பெற்ற சிவனடியார் சின்னம்மையிடம், ""உனக்கு ஒரு புதல்வன் பிறப்பான். தெய்வ மகனான அவன் இறைவனுக்கு நிகரானவனாக இருப்பான்'' என்று வாழ்த்திவிட்டு விபூதியும் தந்து சென்றுவிட்டார்.

விபூதியை நெற்றியில் வைத்து, சிறிதுவாயிலும் போட்ட சின்னம்மை, சற்றுநேரத்தில் மயக்கமடைந்தார். வெளியில் சென்றுவிட்டு வீடு திரும்பிய ராமையாபிள்ளை, மனைவி மயக்கமடைந்திருந்ததை கண்டு அதிர்ந்தார். அவரை எழுப்பி, "என்ன நடந்தது?' என்று விசாரித்தார். சிவனடியார் வந்த விஷயத்தையும், அவர் தனக்கு குழந்தை பிறக்கும் என்று சொன்னதையும் மிரட்சியுடனும், சந்தோஷத்துடனும் சொன்னார். ராமையா பிள்ளையும் மகிழ்ந்தார்.

சிலநாட்கள் கழித்து சின்னம்மையின் வயிற்றில் இறைவன் ஜோதி வடிவமாக புகுந்தார். பத்து மாதங்கள் கருவை சுமந்த சின்னம்மை, 1823, புரட்டாசி 21 (அக்டோபர் 5) ஞாயிற்றுக்கிழமையன்று, சித்திரை நட்சத்திரத்தில் ஒரு தெய்வத்திருமகனை பெற்றெடுத்தார்.

அக்குழந்தை பிறந்ததால் திருமருதூர் கிராமமே அன்று மிகவும் மகிழ்ச்சியுடன் இருந்தது. ராமையாபிள்ளையும், அவர் மனைவி சின்னம்மையும் மகிழ்ச்சிக் கடலின் எல்லைக்கே சென்றனர். குழந்தை பிறந்த நேரத்தில் பசுமையுடன் இருந்த அவ்வூர், மேலும் செழிப்பானது. அக்குழந்தைக்கு "ராமலிங்கம்' என்று பெயர் வைத்தனர். ராமலிங்கத்திற்கு ஐந்து வயதானபோது, அவரது பெற்றோர் அவரைக்

கூட்டிக்கொண்டு சிதம்பரம் தில்லையம்பலம் கோயிலுக்கு சென்றனர். கோயிலில் நடராஜருக்கு பூஜைகள் நடந்துகொண்டிருந்தது. மக்கள் நடராஜரின் அழகில் லயித்து அவரை வணங்கிக் கொண்டிருந்தனர். கோயில் முழுதும் நிசப்தமாக இருக்க, அரங்கமே அதிரும் வகையில் ஒரு சிரிப்பொலி கேட்டது. அனைவரும் சிரிப்பு சத்தம் கேட்ட திசையைப் பார்க்க அங்கு சிறுவனாக இருந்த ராமலிங்கம், நடராஜரைப் பார்த்து பலமாக சிரித்துக் கொண்டிருந்தார். நடராஜரைக் கண்டு சிரிக்கும் இக்குழந்தை "ஞானக்குழந்தை' என அங்கிருந்த பக்தர்களில் சிலர் கூறினர். சிலர் அவரைத் தொட்டு வணங்கிவிட்டுச் சென்றனர்.

சிதம்பரம் கோயிலுக்கு சென்று வந்த சிலநாட்களிலேயே ராமையா பிள்ளை இறந்து போனார். ராமலிங்கத்தின் குடும்பம் வறுமையில் வாடியது. குழந்தைகளை வளர்க்க சிரமப்பட்ட சின்னம்மை, அவர்களை அழைத்துக் கொண்டு சென்னை சென்றார். அங்கு வித்வான் சபாபதி முதலியாரிடம், தனது மூத்த மகன் சபாபதிக்கு கல்வி கற்பிக்கும்படி கேட்டுக்கொண்டாள். சபாபதி சிறந்த தமிழாசிரியர். அவரிடம் பயின்ற சபாபதி, குறுகிய காலத்திலேயே கற்றுத் தேர்ந்து, புராண விரிவுரையாளரானார். குடும்பம் வறுமையில் இருந்து சற்று மீண்டது.

சபாபதி, தன் தம்பி ராமலிங்கத்தை பெரிய அளவில் படிக்க வைத்து அவரை முன்னேற வைக்கவேண்டும் விரும்பினார். ஆனால், ராமலிங்கத்திற்கோ கல்வியில் நாட்டம் செல்லவில்லை. ஆன்மிகத்தில் ஈடுபாடு காட்டினார். அவரை நல்வழிப்படுத்துவதற்காக, தன் குருநாதரான வித்வான் சபாபதி முதலியாரிடம் கல்வி பயில அனுப்பி வைத்தார் சபாபதி.

ராமலிங்கம் அங்கும் சரியாக படிக்கவில்லை. வகுப்பு முடிந்ததும் கந்தகோட்டம் சென்று முருகனை வணங்குவார். ஒருநாள் ராமலிங்கத்தைக் கவனிப்பதற்காக கந்தகோட்டம் முருகன் கோயிலுக்குச் சென்றார் சபாபதி முதலியார். முருகன் சன்னதி முன்பு அமர்ந்திருந்த ராமலிங்கம், ""ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்," என்று மனமுருக பாடிக்கொண்டிருந்தார். பெரும் பொருளுடனான அப்பாடலை ராமலிங்கம் பாடுவதைக் கண்ட சபாபதி முதலியார் மெய்மறந்து நின்று கண்ணீரே வடித்துவிட்டார்.

ராமலிங்கத்தின் அண்ணன் சபாபதியிடம், ""உனது தம்பி ஒரு தெய்வப்பிறவி. அவனுக்கு சாதாரண உலகியல் கல்வி தேவையில்லை. எனவே, இனிமேலும் அவனுக்கு கற்பிக்க தன்னால் முடியாது," என்று சொல்லிவிட்டார்.

தன் தம்பி மேல் கோபம் கொண்ட சபாபதி, வீட்டில் அவருக்கு உணவு கொடுக்க வேண்டாம் என்று சொல்லிவிட்டார். ஆனால், அவர் மீது அளவிலாத அன்பு கொண்டிருந்த சபாபதியின் மனைவி மறைமுகமாக அவருக்கு உணவு கொடுப்பார். இதையறிந்த சபாபதி, ராமலிங்கத்தை வீட்டைவிட்டு அனுப்பி

விட்டார். அவர் கந்தகோட்டம் முருகன் கோயிலுக்கு சென்று அங்கேயே தங்கியிருந்து முருகனின் புகழ் பாடி அவரை வழிபட்டு வந்தார். இதனிடையே தன் மனைவி வற்புறுத்தியதால் அவரை வீட்டிற்கு அழைத்து வந்தார் சபாபதி.

அண்ணனிடம் தான் ஒழுங்காக படிப்பதாக வாக்குறுதியளித்தார் ராமலிங்கம். அவருக்கென தனியே வீட்டில் ஒரு அறையை ஒதுக்கித் தந்தார் சபாபதி. அந்த அறையில் ராமலிங்கம் ஒரு கண்ணாடியை வைத்துக்கொண்டு, அதற்கு மாலை சூடி, வணங்கியபடி இருந்தார்.இதைக் கவனித்த சபாபதி தன் தம்பியின் இறைபக்தியையும், ஆன்மிக நாட்டத்தையும் அறிந்து அதன் பின்பு ராமலிங்கத்தை கண்டிக்கவில்லை. இப்படியே காலம் சென்றது. ஒருமுறை சபாபதி விழா ஒன்றில் பெரியபுராண சொற்பொழிவு நிகழ்த்த ஒப்புக்கொண்டிருந்தார். விழா நடந்த தினத்தன்று அவருக்கு உடல்நிலை சரியில்லாததால், சொற் பொழிவிற்கு செல்ல முடியவில்லை. தனக்குப் பதிலாக தம்பியை அனுப்பினார் சபாபதி. மகிழ்ச்சியுடன் சென்ற ராமலிங்கம், அதுவரையில் இல்லாத வகையில் அருமையாக சொற்பொழிவாற்றினார். அவரது பேச்சாற்றல் பற்றி கேள்விப்பட்டு, சபாபதி வியந்துபோனார். அவருக்கு மணம் முடிக்க விரும்பினார்.

ராமலிங்கமோ, தான் இறைப்பணி செய்வதிலேயே விருப்பம் கொண்டிருப்பதாகவும், திருமணம் வேண்டாம் எனவும் மறுத்தார். ஆனாலும் சபாபதியும், குடும்பத்தினரும் அவரை விடவில்லை. ராமலிங்கத்தின் சகோதரி உண்ணாமலை, தன் மகள் தனக்கோட்டியை ராமலிங்கத்திற்கு மணம் முடித்துக் கொடுத்தார். அவரும் இறைபக்தி மிக்கவராக இருந்தார். கணவன், மனைவி இருவரும் குடும்ப வாழ்க்கையில் ஈடுபாடு இல்லாமல், இறைசிந்தனையிலேயே இருந்தனர். இருவரும் தனித்திருக்கும் வேளையில் திருவாசகம், பெரியபுராணம் என சிவனைப் பற்றி பேசிக் கொண்டிருப்பர்.

இப்படியே ராமலிங்கத்தின் வாழ்க்கை கடந்தது. ஒருமுறை வயலில் விளைந்திருந்த நெல் வாடியிருப்பதைக் கண்டு வருந்திப் பாடினார். இதனால் மக்கள் அவரை தங்களை வாழ்விக்க வந்த வள்ளலாகக் கருதி, "வள்ளலார்' என்ற அடைமொழி தந்தனர். அவர் மக்களுக்கு நற்சிந்தனைகளை போதித்து வந்தார். அவருக்கு 44 வயதாக இருந்தபோது, ஒரு அம்மன் கோயிலில் சொற்பொழிவிற்காக சென்றிருந்தார். அங்கிருந்தவர்கள் அவரை ஒரு பாடல் பாடும்படி கேட்டுக் கொண்டனர். அப்போது, அம்மனுக்கு பலி கொடுப்பதற்காக வைத்திருந்த ஆடு, கோழிகளை பலியிடாமல் இருந்தால் தான் பாடுவதாக சொன்னார் வள்ளலார். அவற்றை பலியிடுவதை நிறுத்தினால் தெய்வ குற்றம் என்று சொல்லி தங்கள் பயத்தை வெளிப்படுத்தினர் மக்கள். அவர்களுக்கு "ஜீவகாருண்ய' உண்மைகளை உணர்த்தி பேசினார் வள்ளலார். இப்படி கருணையின் இருப்பிடமாகவே திகழ்ந்த வள்ளலார், வடலூரில் 1872ம் ஆண்டில் சத்தியஞான சபை என்ற அமைப்பை நிறுவினார்.

1874ல் தை மாதம் 19ம் தேதி வெள்ளிக்கிழமை புனர்பூச நட்சத்திரத்தில் மேட்டுக்குப்பத்தில் உள்ள சித்திவிளாக மாளிகைக்குள் நள்ளிரவு 12 மணிக்குச் சென்று திருக்காப்பிட்டுக் கொண்டார்.

கந்தகோட்டம் முத்துக்குமாரசாமி கோவில்

https://ta.wikipedia.org/wiki/%E0%AE%95%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%95%E0%AF%8B%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%9F%E0%AE%AE%E0%AF%8D_%E0%AE%AE%E0%AF%81%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AF%81%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AF%81%E0%AE%AE%E0%AE%BE%E0%AE%B0%E0%AE%9A%E0%AE%BE%E0%AE%AE%E0%AE%BF_%E0%AE%95%E0%AF%8B%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%B2%E0%AF%8D

முத்துக்குமார சுவாமி கோயில்	
பெயர்	
வேறு பெயர்(கள்):	கந்தசாமி திருக்கோயில் முத்து குமாரசாமி கோயில்
அமைவிடம்	
நாடு:	இந்தியா
மாநிலம்:	தமிழ்நாடு
மாவட்டம்:	சென்னை
அமைவிடம்:	கந்தகோட்டம், ஜார்ஜ் டவுன்
கோயில் தகவல்	

மூலவர்:	முத்துக்குமார சுவாமி முருகன்
தாயார்:	வள்ளி, தெய்வானை
குளம்:	சரவணப்பொய்கை
சிறப்புத் திருவிழாக்கள்:	வைகாசி விசாகம்
உற்சவர்:	முத்துக்குமார சுவாமி
உற்சவர் தாயார்:	வள்ளி, தெய்வானை
கட்டிடக்கலையும் பண்பாடும்	
கட்டடக்கலை வடிவமைப்பு:	திராவிடக் கட்டிடக்கலை
கோயில்களின் எண்ணிக்கை:	ஒன்று
கல்வெட்டுகள்:	

முத்துக்குமாரசாமி கோவில் அல்லது **கந்தசாமி கோயில்** (*Kandaswami Temple, Georgetown*) என்பது தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னை நகரத்தில் பாரிமுனை பகுதியில் சென்னை மத்திய தொடருந்து நிலையம் அருகில் கந்தகோட்டத்தில் அமைந்துள்ள ஒரு முருகன் கோயில் ஆகும்.

இக்கோயிலின் மூலவர் பெயர் கந்தசுவாமி. உற்சவர் பெயர் முத்துக்குமாரசுவாமி. அம்மன் பெயர் வள்ளி & தெய்வானை. தீர்த்தம் சரவணப்பொய்கை. இக்கோயில் மூலவரை பாடியவர்கள் இராமலிங்க அடிகள் மற்றும் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள். இக்கோயில் கோபுரம் ஐந்து நிலைகள் கொண்டது.

வரலாறு

திருபோரூர் திருகோயிலின் வரலாற்றினை முதன் முதலாக அக் கோயிலின் குருக்களான சோமாசி குருக்கள் என்பவர் தம் மனைவிக்கு எடுத்துக்

கூறினார். அதை உடனிருந்து கேட்டிருந்த சபாபதி குருக்கள் அந்த வரலாற்றினைப் பத்து விருத்தங்களாக எழுதி அவற்றை தமது பேரனான சோமாஸ்கந்த குருக்களிடம் கொடுத்தார். சோமாஸ்கந்த குருக்கள் அவ்வரலாற்றினை நன்கு கற்று தமக்கு ஏற்பட்ட ஐயப்பாடுகளுக்கு வேதகிரி குருக்கள் என்பவர் மூலம் விளக்கம் பெற்றார். சோமாஸ்கந்த குருக்கள் தம்முடைய மாணாக்கரான குளத்தூர் கோயில் கிருஷ்ணப்ப செட்டியாரை அழைத்து அவருக்கு ஆகமங்கள், புராணங்கள், சமயனுல்கள், சாத்திரங்கள் முதலியவற்றை கற்பித்து பின்பு தம் பாட்டனார் தமக்கு தந்த கந்த பெருமான் வரலாற்றைப் பற்றிய பத்து விருத்தப்பாக்கலையும் அவரிடம் தந்தார். அப்பாடல்களில் அமைந்துள்ள வரலாறுகள் எல்லோருக்கும் விளங்கும்படி வரகவி - கோயில் கிருஷ்ணப்ப செட்டியார் 206 விருத்தப்பாக்களில் சென்னை கந்தப்பெருமான் திருகோயிலின் தலபுராணத்தைப் பாடினார். கந்தகோட்டம் முருகன் கோவில் 1000 வருடங்களுக்கு பழமையான முருகன் கோவில் தான் இந்த கந்தகோட்டம் முருகன் கோவில். தமிழ்நாட்டில் தொண்டை மண்டலத்தில் கந்தகோட்டம் முருகன் கோவில் மிகவும் முக்கியமானது இந்த கந்தகோட்டம் முருகன்.

தல சிறப்பு

உற்சவர் முத்துக்குமாரர் தனிக்கொடிமரத்துடன் உள்ளார். இவர் தனது முகத்தில் புள்ளிகளுடன் மிகவும் அழகு பொருந்தியவராக காட்சி தருகிறார். சிறப்பு நாட்களில் இவருக்கே முதன்மைப் பூஜை நடத்தப்படுகிறது. இங்குள்ள குளக்கரை சித்திபுத்தி விநாயகர் அமர்ந்த கோலத்தில் தனிச்சன்னதியில் உள்ளார். சரவணப்பொய்கையின் கரையிலும் ஒரு விநாயகர் இருக்கிறார். இவருக்கு வலப்புறத்தில் லட்சுமிதேவியும், இடப்புறத்தில் சரஸ்வதி தேவியும் உள்ளனர். தீர்த்தத்தை நம் மீது தெளித்துக்கொண்டு ஒரே சமயத்தில் இம்மூவரையும் வணங்கினால் கல்வி சிறக்கும், செல்வம் பெருகும், ஞானம் கிடைக்கும் என்கின்றனர்

கோவில் தெய்வங்கள்

- மூலவர்-கந்தசுவாமி(முருகன்)
- உற்சவர்-முத்துக்குமாரர்
- தாயார்-வள்ளி, தெய்வானை
- தல விருட்சம்-மகிழம்
- தீர்த்தம்-சரவணப் பொய்கை
- ஆகமம்/பூஜை-குமார தந்திரம்

திருவிழாக்கள்

தை மாதம் 18-ஆம் நாள் பிரதான திருவிழா, கந்தசஷ்டி, வைகாசி வசந்த உற்சவம், ஆடிக்கிருத்திகை, பங்குனி உத்திரம்.










காணொளிகள்

01] கந்தகோட்டம் அருள்மிகு முத்துக்குமாரசுவாமி திருக்கோயில் திருக்கல்யாண வைபவம்

https://www.youtube.com/watch?v=GHSxVfopn5U [49:02]

02] வருவிக்கவுற்ற வடலூர் வள்ளலார்

https://www.youtube.com/watch?v=cEPZFFgqLFE [1:05:30]

03] தைப்பூச ஜோதி தரிசனம் | வடலூர் வள்ளலார் சத்திய ஞான சபை

https://www.youtube.com/watch?v=aphrCrULSrM [35:47]

(😊)(😊) வள்ளலார் (😊)(😊)